# உங்களுடைய இறையியலைக் கட்டுதல்

பாடம் 2

## கிறித்தவ இறையியலை ஆராய்தல்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு  பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை** ..... 1

**கிறிஸ்தவ இறையியல்** ..... 2

**வரையறுப்பதில் இருக்கும் பிரச்சனைகள்** ..... 2

**செயல்பாட்டு வரையறை** ..... 6

**ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மை** ..... 9

ஒருங்கிணைந்த இறையியல் ..... 9

பன்முக இறையியல்கள் ..... 13

**கிறிஸ்தவ மரபுகள்** ..... 18

**பாரம்பரியத்தை வரையறுத்தல்** ..... 18

எதிர்மறை வரையறை ..... 18

நேர்மறை வரையறை ..... 20

**மரபுகளின் போக்குகள்** ..... 24

பாரம்பரிய கோட்பாடு ..... 25

நடை முறை கிறிஸ்தவ வாழ்க்கை ..... 26

சரியான **உணர்ச்**சிகள் அல்லது உணர்வுகள் ..... 27

**மரபுகளின் முக்கியத்துவம்** ..... 28

நம்மைப் பற்றிய விழிப்புணர்வு ..... 29

மற்றவர்களின் விழிப்புணர்வு ..... 31

**சீர்திருத்த பாரம்பரியம்** ..... 32

**தோற்றம் மற்றும் வளர்ச்சிகள்** ..... 33

**போக்குகள்** ..... 36

**தனித்துவங்கள்** ..... 37

ஐந்து சோலாஸ் ..... 37

வேதாகமத்தின் ஒற்றுமை ..... 38

தேவனைப் பற்றிய கோட்பாடு ..... 40

மனித கலாச்சாரம் ..... 42

**முடிவுரை** ..... 46





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

இளம் தம்பதிகள் திருமணம் செய்து கொள்ளும்போது, அவர்களது குடும்பப் பின்னணியில் இருந்து வரும் வேறுபாடுகளை அவர்கள் அடிக்கடி சமாளிக்க வேண்டியிருக்கும். அவர்கள் ஒருவரையொருவர் ஆழமாக நேசிக்கலாம், ஆனால் அவர்களது குடும்பங்கள் தங்கள் முன்னுரிமைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை எவ்வளவு வடிவமைத்துள்ளன என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த உண்மையை அவர்கள் அங்கீகரிக்கவில்லை என்றால், கிறிஸ்து நம்மை அழைத்தது போன்ற அன்பான மற்றும் மரியாதைக்குரிய திருமண உறவை உருவாக்குவது கடினமாக இருக்கும்.

பல வழிகளில், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் இறையியலை ஆராயும்போதும் இது தான் உண்மையாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் வெவ்வேறு முன்னுரிமைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளனர், அவை அவர்களின் கலாச்சாரங்கள், அவர்களின் துணை கலாச்சாரங்கள் மற்றும் சபையின் பல்வேறு கிளைகளின் மரபுகளிலிருந்து உருவாகின்றன. இந்தப் பின்னணிகள் கிறிஸ்தவ இறையியலைப் படிக்கும்போதும் வாழும்போதும் நமக்கு இருக்கும் முன்னுரிமைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை ஆழமாக வடிவமைக்கின்றன. ஆனால் இந்த தாக்கங்கள் நம்மை எவ்வளவு பாதிக்கின்றன என்பதை நாம் ஒப்புக் கொள்ளாவிட்டால், கிறிஸ்து நம்மை அழைத்த விதத்தில் அன்பான மற்றும் மரியாதைக்குரிய இறையியல் கண்ணோட்டங்களை உருவாக்குவது கடினம்.

*உங்களுடைய இறையியலை கட்டுதல்* என்கிற நமது தொடரின் இரண்டாவது பாடம் இதுவாகும். இந்த பாடத்தில், இந்த முழு ஆய்வுக்கும் வழிகாட்டும் அடிப்படை நோக்குநிலைகளை நாம் வகுப்போம். ”கிறிஸ்தவ இறையியலை ஆராய்ந்து அறிதல்” என்று இந்தப் பாடத்திற்கு நாம் தலைப்பிட்டுள்ளோம், மேலும் ஒரு தனித்துவமான கிறிஸ்தவ இறையியலை எவ்வாறு உருவாக்குவது என்பதை ஆராய்வதில் நமக்கு வழிகாட்டும் சில முக்கியமான முன்கணிப்புகளை நாம் முன்வைப்போம்.

இந்த விஷயத்தை மூன்று வழிகளில் பார்ப்போம், விரிவாக பார்ப்பதிலிருந்து குறுகிய பார்வையில் நாம் இதை பார்ப்போம். முதலில், எந்த வகையான இறையியல் கிறிஸ்தவ இறையியல் என்று கிறிஸ்தவ இறையியல் பற்றிய நமது கண்ணோட்டத்தை வரையறுப்போம். இரண்டாவதாக, குறிப்பிட்ட கிறிஸ்தவ மரபுகள் எவ்வாறு கிறிஸ்தவ இறையியலுக்கு வடிவம் கொடுக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்ப்போம். மூன்றாவதாக, கிறிஸ்தவ நம்பிக்கையின் குறிப்பிட்ட பிரிவுகளை முக்கியப்படுத்திக் காட்டும் சீர்திருத்த பாரம்பரியத்தின் சில அடிப்படைக் கோட்பாடுகளை நாம் பார்ப்போம். முதலில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்தவ இறையியலைப் பற்றிய பொதுவான சிந்தனைக்கு வருவோம். இந்தச் சொற்களைப் பயன்படுத்தும்போது இந்தப் பாடங்களில் எதைக் குறிப்பிடுவோம்? என்பதையும் பார்ப்போம்.

# கிறிஸ்தவ இறையியல்

நாம் அடிக்கடி "கிறிஸ்தவ இறையியலை" பற்றி பேசினாலும், இந்த வெளிப்பாட்டின் அர்த்தம் முற்றிலும் தெளிவாக இல்லை. கிறிஸ்தவர்கள் உண்மையில் நம்புவதைத் தான் கிறிஸ்தவ இறையியல் என்று சிலர் சொல்கின்றார்கள். ஆனால், பல கிறிஸ்தவர்கள் உண்மையில் கிறிஸ்தவம் இல்லாததை நம்புகிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். மற்றவர்கள் கிறிஸ்தவ இறையியலை கிறிஸ்தவர்கள் நம்ப வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் நாம் எதை விசுவாசிக்க வேண்டும் என்பதில் நாம் எப்போதும் உடன்படுவதில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இதே போன்ற சிக்கல்கள் காரணமாக, "கிறிஸ்தவ இறையியல்" என்ற சொல்லைப் பயன்படுத்தும் போது இந்தத் தொடரில் நாம் எதைக் குறிக்கிறோம் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

நாம் பின்வரும் மூன்று விஷயங்களைப் பார்ப்போம். முதலில், கிறிஸ்தவ இறையியலுக்கான வரையறைகளை உருவாக்குவதில் உள்ள சில சிக்கல்களைப் பார்ப்போம். இரண்டாவதாக, கிறிஸ்தவ இறையியலின் செயல்பாட்டு வரையறையை முன்கூட்டியே பார்ப்போம். மூன்றாவதாக, கிறிஸ்தவ இறையியலின் ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மையை நாம் கவனிப்போம். கிறிஸ்தவ இறையியலை வரையறுக்க முயலும்போது நாம் சந்திக்கும் சில சிரமங்களை முதலில் பார்ப்போம்.

## வரையறுப்பதில் இருக்கும் பிரச்சனைகள்

கிறிஸ்தவ இறையியலை கிறிஸ்தவம் அல்லாத இறையியலில் இருந்து வேறுபடுத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதே நமக்கு இருக்கும் மிகப்பெரிய பிரச்சனைகளில் ஒன்றாகும். சில நேரங்களில் வேறுபாடுகளைப் பார்ப்பது கடினம் அல்ல, ஆனால் பல சமயங்களில் கிறிஸ்தவ இறையியலை மற்ற இறையியல்களிலிருந்து பிரிப்பது மிகவும் கடினம். உலகின் பிற முக்கிய மதங்களுடன் கிறிஸ்தவத்தை நாம் கருத்தில் கொள்ளும்போது, கிறிஸ்தவ நம்பிக்கைகளிலிருந்து எளிதில் வேறுபடுத்தக்கூடிய பல இறையியல்கள் உள்ளன. உதாரணமாக, சிலர் கிறிஸ்தவத்தையும் இந்து மதத்தையும் இணைக்க முயற்சித்தாலும், இந்து மதத்தின் பல தெய்வீக நம்பிக்கை கிறிஸ்தவ

விசுவாசத்திலிருந்து மிகவும் வேறுபட்டது. ஒரு கர்த்தரை வணங்குவதை விட பல கடவுள்களை வணங்குவது இரண்டையும் குழப்புவதை கடினமாக்குகிறது.

மறுபுறம், இஸ்லாமிய மதம் கிறிஸ்தவத்திற்கு மிகவும் நெருக்கமானது. கிறிஸ்தவ மதத்தைப் போலவே, இஸ்லாமும் அதன் பாரம்பரியத்தை ஆபிரகாமில் இருந்து பின்பற்றுகிறது. மேலும், இஸ்லாமியத்தின் தீர்க்கதரிசியும் அவரைப் பின்பற்றுபவர்களும் குர்ஆனை இயற்றும்போது கிறிஸ்தவ போதனைகளுடன் தொடர்புடையவர்களாக இருந்தார்கள். எனவே, கிறிஸ்தவத்திற்கும் இஸ்லாம் மதத்திற்கும் இடையே பல ஒற்றுமைகள் உள்ளன. இன்னும், பெரும்பாலும், இஸ்லாம் மதத்தை கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து வேறுபடுத்துவதில் நமக்கு பெரிய சிரமம் இல்லை, ஏனெனில் அவற்றுக்கிடையே வெளிப்படையாக சொல்லப்பட்ட மற்றும் அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக, கிறிஸ்தவம் கிறிஸ்துவின் தெய்வதத்துவம் மற்றும் அவருடைய மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துகிறது, ஆனால் இதற்கு மாறாக இந்த உண்மைகளை இஸ்லாம் மறுக்கிறது.

யூத மதத்தைப் பற்றிய விஷயம் என்ன? யூத மதம் இன்னும் நெருக்கமாக கிறிஸ்தவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது மற்றும் ஒத்திருக்கிறது, ஏனெனில் கிறிஸ்தவம் யூத மதத்திலிருந்து வளர்ந்தது. ஆயினும்கூட, யூத மதம் இயேசுவை கிறிஸ்துவாகிய மேசியா என்று சொல்ல மறுப்பதால், மிகச் சிலரே அதை கிறிஸ்தவ நம்பிக்கையுடன் குழப்புகிறார்கள். இந்த மதத்திலும் இன்னும் பிற முக்கிய உலக மதங்களின் இறையியல் முன்னோக்குகள் கிறிஸ்தவ இறையியலிலிருந்து மிகவும் வேறுபட்டவை எனவே பெரும்பாலான மக்களுக்கு அவற்றைப் பிரிப்பதில் சிரமம் இல்லை. நமது இறையியலுக்கும் அவர்களுடைய இறையியலுக்கும் இடையே உறுதியான எல்லைகளை நாம் அமைக்க முடியும்.

> இறையியலின் அடிப்படையில் யூத மதத்திலிருந்தும் இஸ்லாம் மதத்திலிருந்தும் கிறிஸ்தவத்தை வேறுபடுத்துவது கிறிஸ்துவின் நபரைப் பற்றியது என்பதில் நம்முடைய கவனம் இருக்கிறது. எல்லா மதங்களும் ஒருவித நம்பிக்கை சார்ந்தவை. மற்ற மதங்களான யூதம் மற்றும் இஸ்லாமிலும் நாம் தேவனை நம்புவதைப் போலவே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்... ஆனால் நம்முடைய கதை வேறு மாதிரியானது என்று நான் நினைக்கிறேன், அதாவது, தேவன் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார்... கிறிஸ்தவத்திலுள்ள கிறிஸ்து முன்னால் கொடுக்கப்பட்ட அனைத்து வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுகிறவராக இருக்கிறார். அவர் அந்த மேசியாவின் நிறைவேறுதலாகவுமாகிறார், அவர் உண்மையில் ஜனங்களை அவர்களின் பாவங்களிலிருந்து மீட்கிறார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவர் உண்மையில் ஒரு இரத்த சாட்சியாக தனது உயிரைக் கொடுப்பவர் மட்டுமல்ல, உண்மையில் நாம் மீட்கப்படுவதற்கும், நீதிமானாக்கப்படுவதற்க்கும், மன்னிக்கப்படுவதற்கும் ஒரு வழியை தருகிறார்.
>
> – Dr. ஆலிவர் எல். டிரிமியூ, ஜூனியர்.

அதே நேரத்தில், பல இறையியல் பள்ளிகள் கிறிஸ்தவ மற்றும் கிறிஸ்தவம் அல்லாத சிந்தனைகளை ஒன்றிணைக்கிறது, இதனால் சில சமயங்களில் உண்மையான கிறிஸ்தவத்தை மற்ற நம்பிக்கைகளிலிருந்து பிரிப்பது கடினமாகிறது. யெகோவாவின் சாட்சிகள், மார்மோனிசம் மற்றும் கிறிஸ்தவ அறிவியல் போன்ற பிரபலமான கிறிஸ்தவ வழிபாட்டு முறைகளில் இதுபோன்ற ஒத்திசைவை நம் நாளில் பார்ப்போம். நவீன தாராளமயத்திற்கு ஆதரவை கொடுத்து, தங்கள் முன்னோடிகளின் இறையியல் நிலைப்பாட்டை கைவிட்ட பல சபைகள் மற்றும் பிரிவுகளில் கூட இதைக் காணலாம். இப்போது, இந்த ஒத்திசைவான மதங்களின் சில அம்சங்கள் கிறிஸ்தவம் அல்லாதவை என எளிதில் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன, ஆனால் மற்ற கூறுகள் உண்மையான கிறிஸ்தவத்திற்கு மிக நெருக்கமானவை. இந்த காரணத்திற்காக, இந்த நிகழ்வுகளில், கிறிஸ்தவ மற்றும் கிறிஸ்தவர் அல்லாத இறையியல்களுக்கு இடையே இருக்கும் வித்தியாசத்தை கூர்மையாக வேறுபடுத்திக் காட்ட சிரமம் உள்ளது.

கிறிஸ்துவில் விசுவாசமுள்ள விசுவாசிகளிடையே இறையியல் எவ்வளவு பரவியுள்ளது என்று சிந்தித்தால் நிலைமை எவ்வளவு மோசமானது என்பது புரியும். உண்மையான கிறிஸ்தவத்தின் எல்லைக்குள் கூட, கிறிஸ்தவ இறையியலை விட, பன்மையில், கிறிஸ்தவ இறையியல்களைப் பற்றி பேசுவது பெரும்பாலும் எளிதானது. கிறிஸ்தவத்தின் பல்வேறு வடிவங்கள் உள்ளன, அனைவருக்கும் திருப்தி அளிக்கும் வகையில் எந்த வகையான கிறிஸ்தவம் உண்மையானதாக கருதப்பட வேண்டும் என்பதை அடையாளம் காண சாத்தியம் இல்லாதது. உண்மையான கிறிஸ்தவ இறையியலில் கிழக்கு ஆர்த்தடாக்ஸ் சபையின் போதனைகள் உள்ளதா? ரோம கத்தோலிக்கக் கோட்பாடுகள் எப்படிப்பட்டவைகள்? புராட்டஸ்டன்ட் நம்பிக்கையின் தூய்மையான வடிவம் எது: ஆங்கிலிக்கன்? பாப்டிஸ்ட்? லூத்தரன்? மெதடிஸ்ட்? பிரஸ்பிடேரியன்? சபையின் ஒவ்வொரு பிரிவும் அதன் சொந்த வழியில் கிறிஸ்தவத்தின் பல்வேறு கிளைகளின் தூய்மையை மதிப்பிடுகிறது. மேலும் கிட்டத்தட்ட ஒவ்வொரு கிளையும் அதன் இறையியல் தூய்மையான பதிப்பு என்று நம்புகிறது. இந்த கிறிஸ்தவத்தின் உள்ளார்ந்த கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில் நாம் அதைப் பற்றி சிந்திக்கும்போது, ”கிறிஸ்தவ இறையியலை” துல்லியமாக வரையறுப்பது இன்னும் கடினமாகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இதைப் பற்றி இப்படி யோசித்துப் பாருங்கள்: கிறிஸ்தவ இறையியலை இந்த உலகத்தில் உள்ள எல்லா இறையியல் அமைப்புகளிலிருந்து வேறுபடுத்திக் காட்ட, ஒருவன் கிறிஸ்தவனாக மக்களால் எண்ணப்படுவதற்கு நம்ப வேண்டிய எல்லா போதனைகளையும் எழுதிக்கொடுங்கள் என்று சொன்னால் எப்படி இருக்கும். இயேசுவே ஆண்டவர்; இயேசுவே இரட்சகர்;இயேசு மட்டுமே இரட்சிப்புக்கான ஒரே வழி; இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்; இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்; கர்த்தர் திரித்துவர்; இயேசு முழுவதும் மனிதனும் முழுவதும் கர்த்தருமாவார். விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நீதிமான் ஆகிறான்; கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக இருக்கவேண்டும்; வேதாகமம் பிழையில்லாத தேவனின் வார்த்தை என்று நீங்கள் ஒருவேளை சொல்லலாம். இந்த பாட கருத்துக்களை எல்லாம் நாம் பார்க்கும்போது, ஒருவன் இவைகளை புரிந்துகொள்வதற்கு, விசுவாசிக்க வேண்டுமென்றால் கூட, நன்றாக படித்தவனாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

இப்போது, நிச்சயமாக, நாம் பட்டியலிட்ட கோட்பாடுகள் முக்கியமான கிறிஸ்தவ போதனைகள்தான். ஆனால், இந்தக் கோட்பாடுகளில் சிலவற்றைப் பற்றிக் கேட்காமலேயே, இவை அனைத்தையும் புரிந்துகொள்வதிலோ அல்லது நம்புவதிலோ மிகவும் குறைவுடையவராக இருந்தாலும், ஒரு நபர் உண்மையான கிறிஸ்தவ நம்பிக்கையையும் கிறிஸ்தவ இறையியலையும் கொண்டிருக்கக்கூடும் என்பது நிதர்சனமான ஒன்று. எனவே, எந்தக் கோட்பாடுகள் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு முற்றிலும் அவசியமானவை? கிறிஸ்தவ இறையியலில் குறைந்தபட்சமாக இருக்கவேண்டியது என்ன? உண்மையில், இந்த எல்லைக்கோடு எங்கு வரையப்பட்டு இருக்கிறது என்பது கர்த்தருக்கு மட்டுமே தெரியும்.

கிறிஸ்தவ இறையியலை வரையறுக்க முயலும்போது நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் இவைகளே. வேறு சில மதங்களைப் பொறுத்தவரை, நம்மை வேறுபடுத்துவது கடினம் அல்ல, ஆனால் ஒரு உண்மையான கிறிஸ்தவராக இருப்பதற்கு இறையியலின் என்னென்ன கூறுகள் அவசியம் என்பதைத் துல்லியமாக அறிவது மிகவும் கடினம்.

கிறிஸ்தவ இறையியலை வரையறுப்பதில் உள்ள பிரச்சனைகள், இந்தப் பாடங்களில் நாம் கலந்து பேசுவதற்கு வழிகாட்டும் ஒரு செயல்பாட்டு வரையறையை முன்மொழிய நம்மை வழிநடத்துகிறது. இந்த வரையறை எழுப்பப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிப்பதாக இருக்காது, ஆனால் இது ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் பயனுள்ள தெளிவை நமக்கு வழங்குகிறதாக இருக்கும். இது பூரணமான வரையறையாக இருக்காது, ஆனால் நாம் தொடரும்போது அதைப் பயன்படுத்த போதுமானதாக இருக்கும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# செயல்பாட்டு வரையறை

இந்தப் பாடங்களில், கிறிஸ்தவ இறையியல் பற்றிய நமது வரையறையை, அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை என்று அழைக்கப்படும் கிறிஸ்தவ நம்பிக்கையின் நன்கு அறியப்பட்ட மற்றும் பழமையான வெளிப்பாட்டிற்கு நேராக திருப்புவோம். இந்த விசுவாச அறிக்கையானது, அது நடைமுறைபடுத்தப்பட்ட வடிவத்திலேயே, சுமார் கி. பி. 200 வரை கணிசமாக இருந்தது. மேலும் அது இப்பொழுது இருக்கும் வடிவத்திற்கு கி. பி. 700 இல் வந்தது. உலகம் முழுவதிலிருக்கும் கிறிஸ்தவர்கள் இந்த விசுவாச அறிக்கையை தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தின் சுருக்கமாக பல நூற்றாண்டுகளாகப் படித்து வருகின்றனர்:

> சர்வவல்லமையுள்ள பிதாவை நான் விசுவாசிக்கிறேன்.
> அவர் வானத்தையும் பூமியையும் படைத்தவர்.
> பரிசுத்த ஆவியினால் கருத்தரிக்கப்பட்டு,
> கன்னி மரியாளின் வயிற்றில் பிறந்த,
> அவருடைய ஒரே குமாரனும்  நம்முடைய கர்த்தருமாகிய
> இயேசுவை நான் விசுவாசிக்கிறேன்.
> அவர் பொந்தியு பிலாத்துவின் கீழ் பாடு அனுபவித்து,
> சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டார்;
> அவர் பாதாளத்தில் இறங்கினார்.
> மூன்றாம் நாள் அவர் மரணத்திலிருந்து மீண்டும்
> உயிர்த்தெழுந்தார்.
> அவர் பரத்திற்கு ஏறினார்
> சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது
> பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார்.
> அங்கிருந்து அவர் ஜீவனுள்ளவர்களையும்
> மரித்தவர்களையும் நியாயந்தீர்க்க வருவார்.
> நான் பரிசுத்த ஆவியானவரையும்,
> பரிசுத்த கத்தோலிக்க சபை மற்றும்
> பரிசுத்தவான்களின் ஐக்கியத்தையும்,
> பாவ மன்னிப்பு,
> சரீர உயிர்த்தெழுதல்,
> மற்றும் நித்திய ஜீவனையும் விஊசவாசிக்கிறேன். ஆமென்.

உலகம் முழுவதும் வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ நம்பிக்கையானது கிறிஸ்தவத்தை மிகவும் எளிமையான மற்றும் அத்தியாவசியமான வழிகளில் சுருக்கமாக காட்டுகிறது. மேலும் இது கிறிஸ்தவ இறையியல் பற்றிய நமது அடிப்படை வரையறையாக இருக்கும். நம்முடைய நோக்கங்களுக்காக, இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விசுவாச அறிக்கையுடன் ஒத்துப்போகும் அனைத்து இறையியல்களும் கிறிஸ்தவ இறையியலாகக் கணக்கிடப்படும்.

> கிறிஸ்தவ இறையியலின் அடிப்படை வரையறையாக அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை ஏற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது, ஏனெனில் உண்மையான கிறிஸ்தவத்தை, ”கிறிஸ்தவ” மாற்று போதனைகளி**லி**ருந்தும், ஒரு விதத்திலோ அல்லது பல விதத்திலோ கிறிஸ்தவத்தைப் போலவே இருக்கும் பிற மதங்களிலிருந்தும் வேறுபடுத்துவது முக்கியம். ஆனால் அதே நேரத்தில், நாம் சொல்ல விரும்புவது போல் அது தெள்ளத்தெளிவாக இருப்பதில்லை என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். உதாரணமாக, பொந்தியு பிலாத்துவின் அதிகாரத்தின் கீழ் இயேசு துன்பப்பட்டார் என்பது கிறிஸ்தவ நம்பிக்கைக்கு முக்கியமானது என்று யாராவது உண்மையில் சொல்ல விரும்புகிறார்களா? இப்போது, நாம் ஒருவேளை ஆம் என்று சொல்ல விரும்பலாம். இயேசு உண்மையில் இந்த கிரகத்தில் வாழ்ந்தார் என்று நாம் நம்புவது முக்கியம், ஆனால் பொந்தியு பிலாத்து முக்கியம்தானா? அநேகமாக இல்லை. எனவே, விசுவாச அறிக்கையில் நாம் குழப்பமடையக்கூடிய விதத்தில் இதுபோன்ற விஷயங்கள் இங்குமங்கும் உள்ளன. அதுமட்டுமல்லாமல், நம்மில் சிலர் கிறிஸ்தவ விசுவாசத்தின் அத்தியாவசியமான விஷயங்களில் மற்ற விஷயங்களைச் சேர்க்க விரும்புகிறோம். உதாரணமாக, அப்போஸ்தலர்களின் நம்பிக்கை வேதாகமத்தை குறிப்பிடவில்லை. இது வேதாகமத்தின் பிழையின்மை அல்லது வே**தா**கமத்தின் தவறில்லாத தன்மை அல்லது வார்த்தை மட்டும் (Sola Scriptura) அல்லது அது போன்ற எதையும் குறிப்பிடவில்லை. எனவே, அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை நமது தரநிலையாக ஏற்றுக்கொள்வது பற்றி சிந்திக்கும்போது, மரபுவழி கிறிஸ்தவம் என்றால் என்ன என்பதற்கான நமது செயல்பாட்டு வரையறை என்ன என்றும், அதன் நுணுக்கங்களையும் மனதில் வைக்க வேண்டும். ஆனால் அதே நேரத்தில், அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை பல நூற்றாண்டுகளாக நம்மை சபையுடன் இணைக்கிறது, மேலும் இது உலகம் முழுவதும் இன்றும் கிறிஸ்துவின் உண்மையான சரீரத்துடனும் நம்மை பரந்த அளவில் இணைக்கிறது. எனவே, இது கிறிஸ்தவத்தை சுருக்கி, கிறிஸ்தவ வழிபாட்டு முறைகளிலிருந்தும் பிற

> மதங்களிலிருந்தும் வேறுபடுத்துவதற்கும் ஒரு பயனுள்ள வழியாகும்.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

> கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றிய நமது புரிதலுக்கு அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை மையமாக இருக்கிறது. இது கிறிஸ்தவராக இருப்பதன் அடிப்படை நம்பிக்கைகளை பிரதிபலிக்கிறது. அங்குள்ள பல்வேறு அறிக்கைகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதை நீங்கள் பார்க்கமுடியும். மரபுவழியின் சுற்றளவு என்று நான் வாதிடுவதை இது பல வழிகளில் வரையறுக்கிறது. பிதாவும் குமாரனும் ஒருவருக்கொருவர் எவ்வாறு உறவு வைத்திருக்கிறார்கள் என்றும், ஆண்டவருடன் நாம் எவ்வாறு உறவு வைத்திருக்கிறோம் என்றும், ஆண்டவர் எவ்வாறு சிருஷ்டிப்புடன் உறவு வைத்திருக்கிறார் என்பதைப் பற்றியும் இது பேசுகிறது. இந்த வாழ்க்கை, இரட்சிப்பு, தேவனுடன் நம்முடைய உறவு ஆகியவற்றைப் பற்றிய நமது புரிதலுக்கு அந்த மூன்று கூறுகளும் மையமாக உள்ளன. மேலும் அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை என்ன சொல்லுகிறது என்றும், அது எவைகளை உள்ளடக்குகிறது என்பதையும் அறியவும், அந்த உறவுகள் ஒவ்வொன்றும் நாம் புரிந்து கொள்ளும்போது எவ்வாறு நம்முடைய எண்ணத்தில் உருவாக வேண்டும் என்பதை தேவ வார்த்தைமூலம் வரையறுக்கிறது.
>
> – Dr. ஸ்காட் மனோர்

உதாரணமாக, விசுவாச அறிக்கையானது சிருஷ்டிப்பைக் குறிப்பிடுகிறது. பிதா, அவருடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்று இது திரித்துவத்தின் மூன்று நபர்களையும் குறிப்பிடுகிறது. இது இயேசுவின் அவதாரம், மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் ஆகியவற்றைக் குறிக்கிறது. இது பாவ மன்னிப்பு, பொது உயிர்த்தெழுதல், கடைசி நியாயத்தீர்ப்பு மற்றும் நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கை ஆகியவற்றைப் பற்றியும் பேசுகிறது. இது ஒரு வலுவான மற்றும் பரந்த அடித்தளத்தை இடுவதால், கிறிஸ்தவ இறையியலின் நம்முடைய செயல்பாட்டு வரையறையாக அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை பயன்படுத்துவோம். இந்த குறுகிய பட்டியலுக்கு அப்பாற்பட்ட கோட்பாடுகளைப் பற்றி நாம் பேசினாலும், நம்முடைய நோக்கங்களை மனதில் வைத்து,

இறையியல் என்பது இந்த விசுவாச அறிக்கைக்கு இணங்கினால் அது கிறிஸ்தவம் என்பதில் நாம் திருப்தியடையலாம்.

கிறிஸ்தவ இறையியலுக்கு வரையறையை ஏற்படுத்துவதில் இருக்கும் பிரச்சனைகளை மேற்கொள்ள, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை* நம்முடைய செயல்பாட்டு வரையறையாகப் பயன்படுத்தியிருக்கிறோம். அவ்வாறு செய்வதன் மூலம், கிறிஸ்தவ விசுவாசத்தின் இறையியலில் ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மை இரண்டும் உள்ளது என்பது உடனடியாகத் தெளிவாகிறது.

## ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மை

மாணவர்கள் இறையியலைப் படிக்கத் தொடங்கும் போது, அவர்கள் பெரும்பாலும் ”கிறிஸ்தவ இறையியலைப்” பற்றி, அது ஒரு பொருட்டாக இருப்பதைப்போல, உறுதியுடன் பேசுகிறார்கள். ஆனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இறையியலாளர்கள் கடைப்பிடித்து வரும் பல்வேறு முன்னோக்குகளைப் பற்றி அவர்கள் நன்கு அறிந்திருப்பதால், பன்மையில் ”கிறிஸ்தவ இறையியல்கள்” என்று பேசலாமா என்று அவர்கள் அடிக்கடி ஆச்சரியப்பட தொடங்குகிறார்கள். நாம் முன்பே குறிப்பிட்டது போல, உண்மையான கிறிஸ்தவத்தின் எல்லைக்குள் கூட, உண்மையுள்ள விசுவாசிகள் பலவிதமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். அப்படியானால், அது எது: கிறிஸ்தவ இறையியலா அல்லது இறையியல்களா? ஒன்றுபட்ட கிறிஸ்தவ இறையியல் என்று ஒன்று உள்ளதா? அல்லது பலவிதமான கிறிஸ்தவ இறையியல்கள் உள்ளதா? இறுதியில் இரண்டுமே உண்மை என்பதுதான் பதிலாகும்.

கிறிஸ்தவர்களிடையே பல பொதுவான நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் உணர்வுகள் இருப்பதால், ஒற்றையாகவும், ஒருங்கிணைந்தும் இருக்கும் கிறிஸ்தவ இறையியலைப் பற்றி நாம் பேசலாம். ஆனால் ஒன்றுக்கொன்று வேறுபட்ட பல கிறிஸ்தவ இறையியல்கள் பற்றி பேசவும் நாம் தயாராக இருக்க வேண்டும். கிறிஸ்தவர்களிடையே உள்ள இறையியல் ஒற்றுமையை முதலில் கருத்தில் கொள்வோம்.

### ஒருங்கிணைந்த இறையியல்

தற்போதுள்ள பல்வேறு சபைகள் மற்றும் ஸ்தாபனங்களை நாம் கருத்தில் கொள்ளும்போது, கிறிஸ்தவர்களிடையே இறையியல் ஒற்றுமையைப் பற்றி அர்த்தமுள்ள வகையில் பேசுவது கடினமாகத் தோன்றுகிறது. “கிறிஸ்தவர்களான நீங்கள் உங்கள் நம்பிக்கையில் கூட இசைந்துபோக முடியாது. நான் ஏன் கிறிஸ்தவனாக மாற வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?” என்று அவிசுவாசிகள் சொல்வதை நீங்கள் எத்தனை முறை கேட்டிருக்கிறீர்கள். சில சமயங்களில் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எதிலும் உடன்பட முடியாது என்று தோன்றுகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால் ஒற்றுமையின்மையானது இந்த தோற்றத்தின் ஒரு பகுதி மட்டுமே.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* கூறுவது போல், உலகம் முழுவதிலும் உள்ள உண்மையான கிறிஸ்தவர்கள் ஒரே "பரிசுத்த உலகளாவிய சபையை" உருவாக்குகிறார்கள். எங்களிடத்தில் பிளவுகள் இருந்தபோதிலும், கிறிஸ்துவின் சரீரம் இறையியல் ரீதியாக ஒன்றுபட்டது, ஏனெனில் கிறிஸ்தவர்கள் வழிபாட்டு முறைகள் மற்றும் பிற உலக மதங்களிலிருந்து வேறுபடுத்தும் பல முக்கிய நம்பிக்கைகளில் ஒத்துப்போகிறார்கள். இந்தப் பாடங்களில் கிறிஸ்தவ இறையியலை நாம் ஆராயும்போது, அனைத்து கிறிஸ்தவர்களையும் ஒன்றாக இணைக்கும் விசுவாச ஒற்றுமையை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 4:4-5 இல் சபையின் ஒற்றுமையைப் பற்றி இவ்வாறு சொன்னார்:

> உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் உண்டு (எபேசியர் 4:4-5).

உண்மையில், சபையின் கோட்பாட்டில் ஒற்றுமை இருக்கவேண்டும் என்பது அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் ஒரு இலக்காக இருக்க வேண்டும். யோவான் 17:22-23 இல் இயேசுவே இந்த முடிவை நோக்கி ஜெபித்தார்:

> நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருந்தீர் (யோவான் 17:22-23).

சபையை நாம் இன்னும் நெருங்கி பார்க்கும்போது, கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் வெவ்வேறு அளவிலான இறையியல் ஒற்றுமையைக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். பரந்த அர்த்தத்தில் சொல்வோமேயானால், நம்முடைய வரையறையின்படி, அனைத்து கிறிஸ்தவர்களும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகளின் மீதான நம்பிக்கையால் இறையியல் ரீதியாக ஒன்றுபட்டுள்ளனர். இந்த அடிப்படை ஒற்றுமை, விசுவாச அறிக்கையை உறுதிப்படுத்தும் அனைவருக்கும் மரியாதையையும், பொறுமையையும் அன்பையையும் காட்ட அழைக்கிறது. அவர்கள் எந்த சபையை பிரதிநிதித்துவப்படுத்தினாலும், விசுவாச அறிக்கையை உறுதிப்படுத்தும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அனைவரும் சக விசுவாசிகளாகவே இருக்கிறார்கள். இந்தச் சூழலில், எபேசியர் 4:15 இல் சொல்லப்பட்டுள்ளபடி, அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு பேச நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அத்துடன் கூடுதலாக, விசுவாச அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தாண்டி நாம் நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொள்ளும்போது கிறிஸ்தவர்களிடையே இறையியல் ஒற்றுமை அதிகரிக்கிறது. உதாரணமாக, ஆர்த்தடாக்ஸ், கத்தோலிக்கர்கள் மற்றும் புராட்டஸ்டன்ட்டுகளும் கூட திரித்துவம் மற்றும் கிறிஸ்துவின் தெய்வீகம் போன்ற பொதுவான நம்பிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஆனால், புராட்டஸ்டன்ட் அல்லாத சபைகளுடன் இருப்பதை விட, தங்கள் பாரம்பரியத்திற்கு உண்மையாக இருக்கும் புராட்டஸ்டன்ட் பிரிவுகள் ஒருவருக்கொருவர் அதிக இறையியல் ஒற்றுமையை உடையவர்களாக இருக்கிறார்கள்.

பொதுவான காரியங்கள் யாரிடம் அதிகம் இருக்கிறதோ, அவர்களுடன் ஒற்றுமையைத் தேட முனைவோம், பின்னர் நமக்குப் பொதுவான காரியங்கள் குறைவாக இருப்பவர்களை எதிரிகளாகக் கருதுகிறோம் என்றாலும், நம்முடைய ஆண்டவர் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதை நோக்கி அறிவுறுத்துகிறார். இந்த காரணத்திற்காக, கிறிஸ்தவர்களிடையே உள்ள வேறுபாடுகள், கிறிஸ்துவில் நமக்கு இருக்கும் பரந்த பொதுவான தளத்திலிருந்து நம்மை திசை திருப்ப ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு கோட்பாட்டிலும் உடன்பட முடியாது என்பதால் விரக்தியடைவதற்குப் பதிலாக, கிறிஸ்தவர்கள் விசுவாசத்தின் மையக் கொள்கைகளை ஏதோ ஒரு அளவிற்கு ஒப்புக்கொள்கிறார்கள் என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். இந்த அர்த்தத்தில் பார்த்தால், கிறிஸ்தவ இறையியல் ஒரு ஒருங்கிணைந்த உண்மையாக இருக்கிறது. இதை விட மேலாக, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் எப்போதும் அதிகரித்து வரும் இறையியல் ஒற்றுமையை மேம்படுத்துவது நமது பொறுப்பாகும். எபேசியர் 4:13-16 இல் அப்போஸ்தலனாகிய பவுல் கூறியது போல், நாம் இதைச் செய்ய வேண்டும்:

> விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது (எபேசியர் 4. :13-16).

அவருடைய சபையை குறித்த தேவனின் விருப்பமும், நாம் தொடர அவர் ஏற்படுத்திய இலக்கும் இறையியலால் துண்டு துண்டாவதற்காக இல்லை, ஆனால் வேதத்தின் போதனைகளின்படி இறையியல் ஒற்றுமையை அதிகரிக்கவேண்டும் என்பதாக இருக்கிறது.

> இது சுவாரஸ்யமாக இருக்கிறது. ”நானும் பிதாவும் ஒன்றாக இருப்பது போல, என் சபையாகிய என் ஜனங்கள் ஒன்றாக இருக்க நான் ஜெபிக்கிறேன்” என்ற இயேசுவின் ஜெபத்தை தீவிரமாக எடுத்துக்கொள்வது கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஒரு சவாலாக இருக்கிறது. அதில் ஒரு பதற்றம் உள்ளது, ஏனெனில், ஒருபுறம், ”உண்மையில் முக்கியமானது சத்தியமே தவிர ஒற்றுமை அல்ல” என்று நாம் இழுக்கப்படலாம். மக்கள் அப்படிச் செய்யும்போது, அவர்களுடன் உடன்படாத மற்ற கிறிஸ்தவர்களைப் பற்றி கவலைப்படுவதே இல்லை. ஒற்றுமையாக இருப்பதற்கான அழைப்பு அவர்கள் மீதும் அவர்களின் சபைகள் மீதும் எந்தப் பிடிப்பையையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் நாம் இயேசுவுடைய இருதயத்திலும் அவருடைய ஜெபத்திலும் என்ன இருக்கிறது என்பதை தீவிரமாக எடுத்துக் கொண்டால், அது நமக்கு ஒரு விருப்பமாக இருக்காது. ஒற்றுமைதான் உண்மையில் முக்கியமானதாக இருக்க வேண்டும்... மேலும் நாம் மல்யுத்தம் செய்ய வேண்டிய விஷயங்களில் ஒன்று என்னவென்றால் நாம் எப்படி ஒருவரையொருவர் மதிப்பது? ஒரே மாதிரி இல்லாமல் இருந்தாலும் ஒற்றுமையை எப்படி காட்டுவது? என்பதுதான் என்று நான் நினைக்கிறேன். ஒற்றுமையை ஒன்றுபோல இருப்பதாக நினைத்து குழப்புகிறோம். ஒற்றுமை என்பதும் ஒன்றுபோல இருப்பதும் ஒன்றல்ல. எனவே, கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், விஷயங்களில் வெவ்வேறு கண்ணோட்டங்கள் இருந்தாலும், அந்த ஒற்றுமைக்கு உதவும் விஷயங்களில் ஒன்று, “மற்ற பாரம்பரியங்களைச் சேர்ந்த சகோதர சகோதரிகள் உண்மையில் நாம் தவறவிட்ட விஷயங்களைக் கண்டறிய உதவுவார்கள்” எனவே, நாம் ஒற்றுமையை நாடலாம், வேறுபாட்டை அனுமதித்து, அதன் மத்தியில் உண்மையாக இருக்க முயற்சி செய்யலாம்.
>
> – Dr. கெல்லி எம். காபிக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்தவர்கள் வெவ்வேறு அளவுகளில் ஒன்றுபட்டிருந்தாலும், நம்மிடையே உள்ள பன்முகத்தன்மையை அங்கீகரிப்பதும் ஏற்றுக்கொள்வதும் முக்கியம். இந்த அர்த்தத்தில், நாம் ஒரு கிறிஸ்தவ இறையியலைக் காட்டிலும் பல கிறிஸ்தவ இறையியல்கள் பற்றி சரியாகப் பேசுகிறோம்.

## பன்முக இறையியல்கள்

புராட்டஸ்டன்ட்கள் தங்களுடைய சபையைத் தவிர தங்களுடையதல்லாத மற்ற சபைகளுக்கு தங்கள் ஐக்கியத்தை விரிவுபடுத்தும்போது, பன்முகத்தன்மை அதிகரிக்கிறது என்பதை எளிதில் அடையாளம் கண்டுகொள்கின்றனர். வெவ்வேறு பிரிவுகளை சேர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் சந்திக்கும் போது, அவர்கள் கிட்டத்தட்ட எப்போதும் பன்முகத்தன்மையை எதிர்கொள்கிறார்கள். உதாரணமாக, கிழக்கு ஆர்த்தடாக்ஸ் மற்றும் மேற்கத்திய சபைகள் கூடி வந்தால், அவர்களிடையே வேறுபாடுகள் ஆழமானதாக இருக்கும்.

இப்போது, சபைக்குள் உள்ள பன்முகத்தன்மையை நாம் எதிர்கொள்ளும்போது, நமக்குள் ஏன் வேறுபாடுகள் உள்ளன? என்கிற ஒரு தீவிரமான கேள்வியைக் கேட்க வேண்டும். நம் அனைவருக்கும் ஒரே ஆவிதானே இருக்கிறது. நாம் அனைவரும் ஒரே கிறிஸ்துவை நம்புகிறோம். நாம் அனைவரும் பொதுவான பல மைய நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொள்கிறோம். எனவே, கிறிஸ்தவர்களிடையே பன்முகத்தன்மை இருப்பதற்கு என்ன காரணம்? இந்த சிக்கலைக் கையாள்வதில், கிறிஸ்தவ இறையியல்களின் மத்தியில் குறைந்தது இரண்டு வகையான வேறுபாடுகளை காட்டுவதற்கு இது உதவுகிறது.

முதலில், சில வேறுபாடுகள் உள்ளன, ஏனென்றால் ஒவ்வொரு இறையியல் உண்மையையும் சமமான வலிமையுடன் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. மனிதர்களாக நாம் எதிர்கொள்ளும் வரம்புகள், கிறிஸ்தவ நம்பிக்கையின் சில அம்சங்களை மற்றவர்களை விட அதிகமாக தேர்ந்தெடுத்து வலியுறுத்துவதை தவிர்க்க முடியாததாக ஆக்குகிறது.

**வரம்புகள்.** ஒரே நேரத்தில் நமது விசுவாசத்தின் அனைத்து பரிமாணங்களுக்கும் இரே நேரத்தில் சமமான கவனம் செலுத்த முடியாது. இறையியலாளர்கள் மற்றும் இறையியல் மீதான இந்த வரம்பு பெரும்பாலும் கிறிஸ்தவர்களிடையே உள்ள கோட்பாட்டின் பன்முகத்தன்மையை விளக்குகிறது. தேர்வு செய்வது மற்றும் முக்கியத்துவம் கொடுப்பதிலிருந்து இந்த வகையான பன்முகத்தன்மை ஆரோக்கியமானது மற்றும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டது. வேதாகம ஆசிரியர்கள் கூட தாங்கள் எழுதியவற்றிலும் வலியுறுத்துவதிலும் வேறுபடுவதால், தேவன் இத்தகைய பன்முகத்தன்மையை அங்கீகரிக்கிறார் என்பதை நாம் அறிவோம்.

உதாரணமாக, நமக்கு நான்கு வெவ்வேறு சுவிசேஷங்கள் உள்ளன, ஏனென்றால் இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிய சத்தியத்தின் வெவ்வேறு அம்சங்களில் கவனம் செலுத்த தேவன் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோரை வழிநடத்தினார். பரிசுத்த ஆவியின் தவறமுடியாத தூண்டுதலின் கீழ் இருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் வலியுறுத்தல்களில் வேறுபட்டதால், இன்று கிறிஸ்தவர்களுக்கும் அதுவே உண்மையாக இருக்கிறது என்பதில் நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். தேவன் பல்வேறு வகையான பூக்கள் மற்றும் மரங்களை விரும்புவது, மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகளில் மகிழ்வது மற்றும் பல்வேறு வகையான மனிதர்களை உருவாக்குவதில் மகிழ்ச்சி அடைவது போல, அவர் தனது பிள்ளைகள் வெவ்வேறு வழிகளில் தங்கள் இறையியல்களை வளர்த்துக் கொள்வதைக் கண்டு மகிழ்கிறார்.

> கிறிஸ்துவில் நாம் கொண்டிருக்கும் ஒற்றுமையானது கோட்பாட்டு பன்முகத்தன்மையால் எப்படியோ சவாலாக மாறி இருக்கிறது என்ற கருத்து, அப்படி இல்லை என்று நான் நினைக்கிறேன். நான் நினைக்கிறது என்னவென்றால், வேறுவிதமாக சொல்வதென்றால், கிறிஸ்துவுக்குள் அகலம் மற்றும் அளவுகள் இரண்டும் உள்ளன. கிறிஸ்து மீதான விசுவாசமானது சில பொதுவான நம்பிக்கைகளை உள்ளடக்கியது, அதனுடன் சில புரிதல்கள், சில கருத்துக்கள், சில போதனைகள் அந்த எல்லைகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. எனவே, ஒரு வகையில், கிறிஸ்துவுக்கு அப்பாற்ப்பட்டு புதிய ஏற்**பா**ட்டு பக்கங்களில் அவர் வெளிப்பட்டிருக்கிறார். ஆனால் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட கிறிஸ்து குறுகியவராக இல்லை, மேலும் இந்த எல்லைகளுக்குள், இந்த அளவுகளுக்குள், கிறிஸ்தவ விசுவாசத்தின் உச்சரிப்பின் அடிப்படையில் சில வேறுபாடுகளுக்கு இடமிருக்கிறது. எனவே, பெரிய மதங்கள் அல்லது இறையியல் மரபுகள் சாத்தியமாகும். சபையானது சில விஷயங்களில் வேறுபடுகிறது, ஆனால் இன்னும் கிறிஸ்துவைப் பற்றி ஒரு அடிப்படை விசுவாசத்தைப் பேணுகிறது.
>
> – Dr. டேவிட் ஆர். பாவுர்

நியூயார்க் நகரத்தில் உள்ள கிறிஸ்தவ இறையியலை விட கிராமப்புற ஆப்பிரிக்காவில் உள்ள கிறிஸ்தவ இறையியல் வெவ்வேறு சத்தியங்களைத் தேர்ந்தெடுத்து வலியுறுத்தும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். பெய்ஜிங்கில் உள்ள கிறிஸ்தவ இறையியலில் இருந்து தென் அமெரிக்க கிறிஸ்தவ இறையியல் வேறுபட்டதாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பன்முகத்தன்மை, தேவனால் மீட்கப்பட்ட மக்களை அவர்களின் சொந்த கலாச்சார அமைப்புகளுக்கு ஏற்ற விதத்திலும், அவர்களின் சொந்த குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ற விதத்திலும், அவர்களின் விசுவாசத்தின் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்த வழிவகுத்தது.

இரண்டாவது இடத்தில், பன்முகத்தன்மையின் பிற வடிவங்கள் அவ்வளவு தீங்கற்றவை அல்ல மேலும் அதிக எச்சரிக்கை தேவைப்படுகின்ற ஒன்றாகும். இவை பாவம் மற்றும் பிழையால் இயக்கப்படும் வேறுபாடுகள் ஆகும். அவைகள் வலியுறுத்தவேண்டியதாகவோ அல்லது தேர்ந்தெடுக்கும் விஷயங்களாகவோ இருப்பதற்குப் பதிலாக, இந்த வேறுபாடுகள் குழுக்கள் அல்லது நபர்களை தவறான கோட்பாடுகள், நடைமுறைகள் ஆகியவற்றில் வழிதவற வைக்கிறது.

**பாவம் மற்றும் பிழை.** சபையில் இந்த வகையான பன்முகத்தன்மை எழும் போது, குறைந்தபட்சம் ஒரு நபரோ அல்லது குழுவோ தவறான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கிறார்கள். மேலும் சில சூழ்நிலைகளில், அனைவருமே தவறாக இருக்கலாம். இந்தச் சமயங்களில், தவறு எங்கே இருக்கிறது என்பதை நாம் தாழ்மையோடும் உண்மையோடும் அறிய முற்பட வேண்டும்.

> எனவே, கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகவும் சுவாரஸ்யமான புதிர் உள்ளது. வேதகமமானது தேவனின் அதிகாரபூர்வமான வார்த்தை என்று நாம் நம்புவதால், அதுவே நமது விசுவாசமாகவும், நம் வாழ்க்கையாகவும், அவருக்கான நமது அர்ப்பணிப்**பாகவும்** இருப்பதனால், இந்த சமூகத்தில் நாம் வாழும் விதம், நற்செய்தியைப் பேசும் விதம், அதை முன்வைக்கும் விதம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நாம் நம்புகிறோம். ஆனால், மற்ற மக்களுக்கு இன்னும் வேதம் என்ன கற்பிக்கிறது என்பது எல்லா நேரத்திலும் அனைவருக்கும் உடனடியாகத் தெளிவாகத் தெரியவில்லை. எனவே, வேதம் கற்பிக்கிறதைப் பின்பற்றவும், அதன் அதிகாரத்தின் கீழ் இருக்கவும் விரும்புகிறோம், ஆனால் நாம் எப்போதும் சரியாக இருக்க மாட்டோம் என்பதை அறிவோம், ஏனென்றால், அது எதை போதிக்கிறது என்று நாம் நினைக்கிறோமோ, அதுவே நிஜத்தில் போதனையாகிறது. ஆனால் ஒரு கட்டத்தில் நாம் தவறு என்று தெரிந்தால், நாம் என்று நினைப்பதை நிறுத்திவிட்டு சரியானதைச் சிந்திக்கத் தொடங்குவோம்; எனவே, அது நமக்கு எப்படி இருக்கிறதோ அப்படியே இருப்பதில்லை. மிகவும் பயனுள்ள அறிவுரை அல்லது இதை அணுகுவதற்கு மிகவும் பயனுள்ள வழி என்று நான் நினைக்கிறது என்னவென்றால், நாம்

> ”அறிவியலியல் பணிவு” என்று அழைக்கும் ஜொலிப்பான மொழியைப் பயன்படுத்தலாம். அதன் அர்த்தம் என்னவென்றால், நமது குறைபாடுகள், நமது தோல்வி**களைப்** பற்றிய உணர்வு, விழிப்புணர்வு, நமக்கு இருக்கிறது என்பதாகும். வேதாகமம் கூறுவதைப் பற்றி நாம் கொண்டிருக்கும் விளக்க**ப்**படத்துடன் வாழ்வது தரும் விழிப்புணர்வு என்னவென்றால், நான் தவறாக இருக்கலாம்; இதைப் பற்றி நான் தவறாக புரிந்திருக்கலாம். எனவே, ”நான் இதைப் பற்றி தவறாக நினைத்து இருக்கலாம்” என்று சொல்லும் பழமொழி, வேதத்தில் நாம் உறுதியாக இருக்கிறோம் என்றும், வேதாகமத்தின் செய்தியை நாம் நம்பும்போது, அது நம்மீது ஒரு அதிகாரம் செலு**த்**தக்கூடியதாக் இருக்க அனுமதிக்கிறோம் என்றும் அர்த்தப்படுகிறது. ”ஆனால் நான் இதைப் பற்றி தவறாக புரிந்திருக்கலாம்” என்பது இன்னும் கற்றுக்கொள்வதற்கு நம்மை உந்த வேண்டும். கருத்து வேறுபாடு உடைய பிறர் சொல்வதைக் கேட்க அது நம்மைத் தூண்ட வேண்டும். மேலும் பயப்படுவதற்குப் பதிலாக, கோபப்படுவதற்குப் பதிலாக, ”அது வேதம் சொல்லவில்லை” என்பதால், அது மற்றவர்களின் விளக்கங்களைக் கேட்பதில் நமக்கு ஆர்வத்தையும் முக்கியத்துவ உணர்வையும் ஏற்படுத்தும், ஏனென்றால் நாம் தவறாக இருக்கலாம் என்பதை புரிந்துகொண்டால், மேலும் அவர்களும் தவறாக இருந்தால், ஒருவரையொருவர் கேட்டுக்கொள்வதன் மூலம் நாம் சரியானதிடம் இன்னும் கொஞ்சம் நெருங்கிவிடலாம்.
>
> – Dr. டிம் சான்ஸ்பரி

பிழையைக் கண்டறிவதற்கு, ஒருபுறம், சுயவிமர்சனம் செய்துகொள்வதும், நமது இறையியலில் நுழைந்துவிட்ட எந்தவொரு தவறான நம்பிக்கையையும் கைவிடத் தயாராக இருப்பதும் அவசியம். மறுபுறம், மற்ற விசுவாசிகளும் தங்கள் புரிதலை மேம்படுத்த உதவுவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். சில நேரங்களில் இது மிகவும் எளிதாக இருக்கும், ஆனால் மற்ற நேரங்களில் இந்த செயல்முறை மிகவும் கடினமாக இருக்கும். எதைப் பற்றி நாம் உறுதியாக இருக்க முடியுமென்றால்: கிறிஸ்து மகிமையில் திரும்பும் வரை நாம் நம்மையோ அல்லது மற்றவர்களையோ எல்லா *தவறுகளிலிருந்தும்* விடுவிக்க முடியாது. இருப்பினும், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நம்முடைய பொறுப்பு என்னவென்றால், வேதாகமத்தின் போதனைகளுக்கு நம்மை உண்மையாக்கிக் கொள்வதில் கடினமாக உழைக்க வேண்டும், மற்றவர்களும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவ்வாறே செய்ய உதவ வேண்டும். 1 தீமோத்தேயு 4:16ல் பவுல் எழுதியதை நினைவில் வையுங்கள். அவர் சொன்னார்:

> உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய் (1 தீமோத்தேயு 4:16)

> நம்முடைய ஊழிய தலத்தில், நாம் வெவ்வேறு ஸ்தாபன பின்னணிகள், வெவ்வேறு மரபுகள் கொண்ட வெவ்வேறு மிஷனரிகளை சந்திக்கிறோம், மேலும் அவர்களுடன் இணைந்து செயல்படுவது முக்கியம் என்று நினைக்கிறேன். சுவிசேஷ சமூகத்தில் எங்களுக்கு இடையே பொதுவான விஷயங்கள் அதிகம் இருக்கின்றன. இப்போது, நாங்கள் உடன்படாத பிரச்சனைக்குரிய விஷயங்களும் உள்ளன. கடைசி கால நிகழ்வுகள் மற்றும் ஞானஸ்நானம் மற்றும் ஆவிக்குரிய வரங்கள் இவைகளை குறித்து எப்போதும் பிளவுகள் இருக்கும், அவற்றில் சில சபைகள் பிரிக்கப்பட்ட மூன்று பெரும் பிரிவுகளாக இருக்கலாம். ஆனால் நமக்கு பொதுவானது எவ்வளவோ இருக்கிறது. மேலும் நமது இறையியலாளர்களும் நமது போதகர்கள் அனைவரும் முதலில் நமக்கு பொதுவாக உள்ள அந்த பகுதிகளை அங்கீகரிப்பதில் அக்கறை காட்ட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். மேலும் நாம் அதை எவ்வளவு அதிகமாகச் செய்கிறோமோ, அந்தளவுக்கு அத்தியாவசியமானவற்றைச் சுற்றி ஒற்றுமை மற்றும் விசுவாசத்தின் கூறுகளைப்பற்றிய பொதுவான உணர்வை வளர்த்துக் கொள்கிறோம். தீர்ப்பு செய்யவும் கண்டனம் செய்யவும் வேண்டும் என்ற உணர்வைக் காட்டிலும் கருணையின் ஆவியுடன் நாம் உடன்படாத பகுதிகளை நாம் ஒற்றுமையுடன் நடத்தலாம்.
>
> – Dr. ஸ்டீவ் கர்டிஸ்

இந்த பாடங்களில் ”கிறிஸ்தவ இறையியல்” என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன என்பதை இப்போது நாம் பார்த்தோம், நாம் பார்க்கப்போகும் நமது இரண்டாவது தலைப்பு: கிறிஸ்தவ மரபுகள் ஆகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# கிறிஸ்தவ மரபுகள்

புராட்டஸ்டன்ட்டுகள் கிறிஸ்தவ பாரம்பரியத்தின் மீது சந்தேகம் கொள்வது இயற்கையானது. சீர்திருத்தத்தில் ஆழமாக வேரூன்றியவர்களாக நாம் நம்மை பார்க்கிறோம், மேலும் புராட்டஸ்டன்ட் சீர்திருத்தவாதிகள் அனைத்து மனித மரபுகளுக்கும் மேலாக வேத அதிகாரம் இருப்பதை மீண்டும் உறுதிப்படுத்தினர். இருப்பினும், எல்லா மனித மரபுகளும் வேதாகமத்திற்கு முரணாக இல்லை. மேலும், நாம் பார்க்கப்போவது என்னவென்றால், கிறிஸ்தவ மரபுகள் பரிசுத்த ஆவியானவர் சபைக்கு வழங்கிய ஞானத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்பதை வேதவசனங்களே கற்பிக்கின்றன என்பதால், அவற்றில் அதிக மதிப்பு உள்ளது. எனவே, நாம் ஒரு கிறிஸ்தவ இறையியலைக் கட்டமைக்கும் போது அதில் இறையியல் மரபுகளுக்கு என்ன இடம் இருக்கிறது?

இந்த கேள்விக்கு பதிலளிக்க, நாம் மூன்று தலைப்புகளை பார்க்கவேண்டியிருக்கிறது. முதலில், ”இறையியல் பாரம்பரியம்” என்ற சொல்லை வரையறுப்போம். இரண்டாவதாக, இறையியல் மரபுகளின் சில போக்குகளை ஆராய்வோம். மூன்றாவதாக, நம் வாழ்வில் இறையியல் மரபுகளின் முக்கியத்துவத்தை ஆராய்வோம். கிறிஸ்தவ இறையியல் பாரம்பரியத்தைப் பற்றி பேசும்போது நாம் என்ன சொல்கிறோம் என்பதை முதலில் பார்ப்போம்.

## பாரம்பரியத்தை வரையறுத்தல்

சுவிசேஷ கிறிஸ்தவர்கள் ”பாரம்பரியம்” என்ற சொல்லைப் பல வழிகளில் பயன்படுத்துகிறார்கள், அதை நாம் இங்கே எப்படிப் பயன்படுத்துவோம் என்பதைக் குறிப்பிட வேண்டும். எதிர்மறையான வரையறையை வழங்குவதன் மூலம் முதலில் நாம் எதைச் சொல்லவில்லை என்பதை விளக்கி சிக்கலைத் தெளிவுபடுத்திவிட்டு பின்னர் ஒரு நேர்மறையான வரையறையை வழங்குவதன் மூலம் நாம் என்ன அர்த்தத்தில் சொல்கிறோம் என்பதைக் குறிப்பிடுகிறோம். முதலாவதாக, இன்று பல சுவிசேஷ வட்டாரங்களில் ”பாரம்பரியம்” என்ற சொல் மிகவும் எதிர்மறையான அர்த்தங்களைக் கொண்டுள்ளது, ஏனெனில் இது ”பாரம்பரியம்” என்று நாம் அழைக்கும் விஷயத்துடன் நெருக்கமாக தொடர்புடையது.

### எதிர்மறை வரையறை

அமெரிக்க இறையியலாளர் ஜான் பிரேம் இவ்வாறு கூறுகிறார்:

> சோலா ஸ்கிரிப்டுரா, அதாவது, “வசனம் மட்டும்” மீறப்படும் இடத்தில் ”பாரம்பரியவாதம்” உள்ளது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பாரம்பரியவாதம் என்பது பொதுவாக வேதத்தை விட, நீண்டகால பாரம்பரிய விருப்பத்தை தெரிவு செய்து, மனித விருப்பங்களை அடிப்படையாக வைத்து இறையியல் நம்பிக்கைகளை கட்டுவது. மாற்கு 7:8-13 இல் இயேசு வேதபாரகர், பரிசேயர் மற்றும் சதுசேயர்களுக்கு இந்த வார்த்தைகளை சொன்னார்:

> நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டுவருகிறவர்களாய்… தேவ வசனத்தை அவமாக்குகிறீர்கள் (மாற்கு 7:8-13).

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் பாரம்பரியவாதத்தை நிராகரிக்க வேண்டும், ஏனென்றால் அது வேதத்திற்கு மட்டுமே உரிய அதிகாரத்தை வெறும் மனித கருத்துக்கு அளிக்கிறது. தெய்வீக வெளிப்பாட்டைக் காட்டிலும் மனித முட்டாள்தனம் நம் நம்பிக்கையை எளிதாக வழிநடத்தும் என்பதால், இயேசு தம் நாளில் செய்ததைப் போலவே, அதன் அனைத்து வடிவங்களிலும் பாரம்பரியத்தை நாம் எதிர்க்க வேண்டும்.

> சரி, முதலில், பாரம்பரியம் கிறிஸ்தவர்களுக்கு ஒரு நல்ல அம்சம் என்று நான் நினைக்கிறேன். அங்கிருந்துதான் நமது கோட்பாடுகளை சுருக்கமாகப் பெறலாம். ஆனால் பாரம்பரியத்துடன் தொடர்புடைய ஆபத்துகள் குறித்தும் நாம் கவனமாக இருக்க வேண்டும். நம்மில் சிலருக்கு மாற்கு 7 ஐ பற்றி தெரியும், அங்கு இயேசு மனிதனின் மரபுகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் பரிசேயர்களையும், நியாயப்பிரமாண ஆசிரியர்களையும் தேவ காரியங்களை ஒதுக்கி வைத்தததற்க்காக உண்மையில் கடிந்துகொள்கிறார்…நான் ஒருமுறை சபைக்கு போன கதை என் நினைவுக்கு வருகிறது. இந்த சபை மிகவும் முறையானதாகவும் காலையில் ஜெப புத்தகங்களை விரும்புகிறதாகவும் இருந்தது. பல்கலைக் கழகங்களில் இருந்து வந்த இளைஞர்கள் உண்மையில் மரபுகளை மதிக்கவில்லை என்று தேவாலயத்திற்கு வரும்போது முதியவர்கள் போராடினார்கள். தேவாலயம் உண்மையில் இந்த இளைஞர்களை தொலைந்து போனவர்களாகவும், கர்த்தரைத் தேடுகிறவர்களாகவும் பார்க்காமல், அவர்களுக்கு சுவிசேஷத்தை சொல்லவேண்டும் என்றும் பார்க்காமல் அவர்களை உள்ளே வரவிடாமல் தடுத்தது. எனவே அதுவே நமது பாரம்பரியங்கள் சுவிசேஷம் செல்லும் வழியில் குறுக்கே வரக்கூடிய ஒன்றாக இருக்க முடியும்.

– Dr. உயானி சிண்டோ

இரண்டாவது இடத்தில், ”பாரம்பரியவாதம்” மிகவும் எதிர்மறையான அர்த்தங்களைக் கொண்டிருந்தாலும், ”பாரம்பரியம்” பற்றிய வேறுபட்ட கண்ணோட்டத்தை நாம் கொண்டிருக்க வேண்டும். நமது நவீன காலத்தில் சொல்லப்படும் சுவிசேஷத்தை கேட்கும் காதுகளுக்கு இது விசித்திரமாகத் தோன்றினாலும், அப்போஸ்தலனாகிய பவுல் உண்மையில் கிறிஸ்துவின் சரீரத்தில் பாரம்பரியத்திற்கு சாதகமான பங்கை உறுதிப்படுத்தினார்.

## நேர்மறை வரையறை

1 கொரிந்தியர் 15:3 இல் கொரிந்தியர்களுக்கு பவுல் எழுதியதை கவனியுங்கள்:

> நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார் (1 கொரிந்தியர் 15:3).

கிரேக்க மொழியில் ”ஒப்புவித்தது” என்பதை குறிக்க பாரடிடோம் (παραδίδωμι) மற்றும் ”அடைந்தது” என்பதை குறிக்க *பாரலம்பானோ* (παραλαμβάνω) என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த சொற்கள் பவுலின் எழுத்துக்களில், கிறிஸ்தவ போதனைகளை அவர் மற்றவர்களுக்கு கொடுப்பதை குறிக்க பலமுறை வருகிறது. இந்த உண்மை நமது விவாதத்திற்கு முக்கியமானது, ஏனென்றால் யூத பாரம்பரிய போதனைகளை விவரிக்க முதல் நூற்றாண்டு யூத வட்டாரங்களில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் இவைகளே.

உண்மையில், பவுல் கிறிஸ்தவ விசுவாசத்தை ஒருவரிடமிருந்து மற்றவருக்கும், ஒரு தலைமுறையிலிருந்து மறு தலைமுறைக்கு பரிமாற்றப்படும் ஒரு பாரம்பரியமாக கருதினார். பவுல் பயன்படுத்திய விதத்திலிருந்து சற்றே வித்தியாசமான வழிகளில் ”பாரம்பரியம்” என்ற வார்த்தையை நாம் பயன்படுத்தினாலும், ”கிறிஸ்தவ பாரம்பரியம்” அல்லது ”கிறிஸ்தவ மரபுகள்” என்ற சொற்களால் நாம் தள்ளிப்போட வேண்டியதில்லை. தெளிவாக சொன்னால், பவுல் பாரம்பரிய மொழியை நேர்மறையான வழியில் பயன்படுத்தினார்.

> வேதம் வாய்மொழி மற்றும் எழுதப்பட்ட அப்போஸ்தலரின் பாரம்பரியம் இரண்டையும் நேர்மறையாகவே பேசுகிறது. சுவிசேஷகர்களாகிய நாம் வேதத்தை எடுத்துரைக்கும்போது, அப்போஸ்தளர்களின் பாரம்பரியத்தையும் பாதுகாக்க விரும்புகிறோம் என்று நாம் தாராளமாகச் சொல்லலாம்… எனவே, உதாரணமாக, புராட்டஸ்டன்ட் சீர்திருத்தவாதிகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சபையின் பாரம்பரியத்தை வேதத்தின்படி மதிப்பிடும்போது, அவைகளை தயங்காமல் நிராகரிக்கவும் மாற்றி அமைக்கவும் நினைத்தார்கள். அவர்கள் வேதத்துடன் உடன்படாத பாரம்பரியங்களைத் தவிர, சபை பாரம்பரியமானது அப்போஸ்தல பாரம்பரியத்துடன் வேதத்தில் உடன்பட்ட இடத்தில் , சீர்திருத்தவாதிகள் அந்த சபை பாரம்பரியங்களை பாதுகாத்தனர்.

– Dr. ஆண்ட்ரூ பார்லி

நமது பாரம்பரியங்களினால் பல நன்மைகள் உள்ளன, சில சமயங்களில் அவைகளை சடங்குகள் என்று அழைக்கிறோம். மக்கள் அவர்கள் யார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும், தேவன் யார், தேவன் என்ன செய்தார் என்பதை தொடர்ந்து நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும், மேலும் பல மரபுகள் மற்றும் சடங்குகள் அவைகளை நினைவில் வைக்க உதவுகின்றன. பாரம்பரியங்கள் மற்றும் சடங்குகளுக்கு நீங்கள் அந்த இடத்தைக் கொடுத்து, தேவன் யார், தேவன் என்ன செய்தார், மனிதகுலம் யார், மனிதகுலத்தின் நிலைப்பாடு என்ன என்பதை நினைவூட்டுவதற்காக அவற்றைப் பயன்படுத்தினால், அது தேவனின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்த உதவுகிறதாக இருக்கும். அவைகள் ஒருபோதும் தேவனின் இடத்தைப் எடுத்துக்கொள்ளக்கூடாது; அவைகள் ஒருபோதும் இயேசுவின் இடத்தையும் அவருடைய தகுதிகளையும் எடுக்கக்கூடாது. அவைகள் ஒரு நினைவூட்டல் மட்டுமே; தேவனுடன் நாம் கொண்டிருக்கும் உறவின் அர்த்தம் என்ன, அதை நாம் எவ்வாறு வளர்த்துக் கொள்கிறோம், அவருடன் அந்த உறவைப் பெற தேவன் எவ்வாறு அனுமதிக்கிறார், என்பதை அந்த சடங்குகள் மற்றும் மரபுகள் அவரை நினைவுகூர நமக்கு உதவுகின்றன.

– Rev. பாப்லோ டாரஸ், மொழிபெயர்ப்பு

நம்முடைய நோக்கங்களுக்காக, ஒரு இறையியல் பாரம்பரியத்தை பின்வருமாறு வரையறுப்போம்:

ஒப்பீட்டளவில் நீண்டகால இறையியல் கோட்பாடு, நடைமுறை வாழ்க்கை அல்லது நம் உணர்வுகள் சபைகளை ஒன்றுக்கொன்று வேறுபடுத்துகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த வரையறையை இரண்டு முக்கிய பகுதிகளாகப் பிரிப்போம். முதலாவதாக, இது ”ஒப்பீட்டளவில் நீண்டகால கோட்பாடு, நடைமுறை அல்லது உணர்வாக” இருக்கிறது. அதாவது, இந்தப் பாடங்களில் இறையியல் பாரம்பரியத்தைப் பற்றிப் பேசும்போது, சமீபத்தில் தொடங்கிய ஒன்று நம் மனதில் இருப்பதில்லை. மாறாக, நம்பிக்கைகளின் அமைப்பாகிய நமது இறையியல் பாரம்பரியமானது நீண்ட காலமாக இருக்கும் போது மட்டுமே, அது ஒரு இறையியல் பாரம்பரியமாக மாறும். நமது வரையறையின்படி, சபையானது பல ஆண்டுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கைகள் மட்டுமே பாரம்பரியம் என்று சொல்ல தகுதி பெறுகின்றன.

இரண்டாவதாக, ஒரு இறையியல் பாரம்பரியமானது ”ஒன்றிலிருந்து மற்றொரு சபையை வேறுபடுத்துகிறது.” வேறு வார்த்தைகளில் கூறுவதானால், குணாதிசயங்களை அடையாளம் காணும் குறிப்பிட்ட பிரிவுகளை அல்லது விசுவாசிகளின் ஐக்கியத்தின் அம்சங்களை நாம் மனதில் வைத்திருக்கிறோம். ஒரு பாப்டிஸ்டை பாப்டிஸ்டாக மாற்றுவது எது? பாப்டிஸ்ட் பாரம்பரியம். ஒரு மெதடிஸ்ட்டை மெதடிஸ்டாக மாற்றுவது எது? மெதடிஸ்ட் பாரம்பரியம். விசுவாசிகளின் குழுக்கள் நீண்ட காலத்திற்கு பொதுவான கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது, இந்தக் கண்ணோட்டங்கள் அவர்களின் தனித்துவமான இறையியல் பாதைகளாகின்றன. சபையின் ஒரு கிளையில் தங்கள் மனது மற்றொன்றை விட அதிகமாக இருப்பதை அவர்கள் காண்கிறார்கள்.

> கிறிஸ்தவ பாரம்பரியங்கள் அல்லது சபையின் கிளைகள் மற்றும் சபையின் வெவ்வேறு கிளைகள் வலியுறுத்தும் பல்வேறு விஷயங்கள் மற்றும் பல ஆண்டுகளாக அவர்கள் பின்பற்றிய பாதைகள் என்று வரும்போது, உச்ச நிலைக்கு செல்வது எளிது. நம்முடைய உச்ச நிலையானது, நமது வாழ்க்கையில் அத்தகைய தாக்கத்தை நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை, கிறிஸ்துவுடன் இருக்கும் நம்முடைய தனிப்பட்ட நடை மற்றும் நம்முடைய தனிப்பட்ட வேத வாசிப்பு இவைகளில் ஏற்படாமல் இருக்க வலியுறுத்தி அவைகளை நிராகரிப்பதாகும். மேலும் அந்த உச்ச நிலையை அதிகமாக வலியுறுத்தும் நபர்கள் வீடற்ற நபரைப் போலவே இருக்கிறார்கள். வீடற்ற ஒரு நபர் தெருவில் நடந்து செல்வதை நீங்கள் பார்த்திருக்கலாம், அவர் இதை பார்ப்பார், அதை எடுத்து தனது பையிலோ அல்லது தனது வண்டியிலோ வைப்பார், மேலும் அதை விட்டுவிட்டு வேறு எதையாவது பார்ப்பார். எனவே, பையில் உண்மையில் பொருந்தாத விஷயங்கள் மட்டுமே மொத்தமாக நிறைந்துள்ளதாகவும், மேலும் அவரது வாழ்க்கையும் சிதைந்தே போனதாகவும் இருக்கும். இதில் ஒற்றுமை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இல்லை. அவர் செல்ல வீடு இல்லை. எனவே அப்படிப்பட்ட தீவிர நிலைமையானது, உயர்ந்த தனிநபர்த்துவமாக இருந்து, கிறிஸ்தவ பாரம்பரியங்கள் அல்லது சபையின் கிளைகள் மற்றும் அவர்களிடம் உள்ள ஞானத்தை நிராகரிக்கிறதைப் போன்றதாக இருக்கிறது.

இப்போது, மற்ற உச்ச நிலையானது, சபையின் ஒரு கிளையாக இருக்கிற பாரம்பரியத்தையோ, சபையின் பல்வேறு கிளைகள் பல ஆண்டுகளாக பின்பற்றும் பாதைகளையோ, கொஞ்சம் குறைய சிறைச்சாலை போல எடுத்துக்கொள்வதாகும்... மேலும் தலைமுறை தலைமுறையாகக் கொடுக்கப்பட்ட நீண்ட கால பாரம்பரியங்களை நீங்கள் பார்த்து, வெளியேற கதவு கூட இல்லாமல், ஜன்னல்கள் ஏதுமில்லாத கட்டிடத்தில், உங்களை நீங்களே உள்ளே வைத்துப் பூட்டியும் கொள்ளவது போன்றதாகும். நீங்கள் ஏன் இதை செய்கிறீர்கள்? நீங்கள் ஏன் அதை நம்புகிறீர்கள்? நீங்கள் ஏன் இப்படி உணர்கிறீர்கள்? ”ஏனென்றால் இதையே என் சபை என்னை நம்பவும் உணரவும் செய்யவும் சொல்கிறது” என்று சொல்வோமானால் அது ஒரு சிறைச்சாலை போன்ற கிறிஸ்தவ பாரம்பரியத்தை உருவாக்குவதாகும். மேலும், பாரம்பரியமானது நிராகரிப்பின் உச்சமாக இருப்பதை நாங்கள் விரும்பவில்லை, ஏனென்றால் அங்கு நீங்கள் வீடு இல்லாத ஒரு தனிநபரைப்போல இருக்கிறீர்கள், மேலும் தேவாலயத்தின் ஒரு கிளையை உங்கள் சிறைச்சாலையாகவும் மாற்ற விரும்பவில்லை, ஏனென்றால் நீங்கள் உங்களைப் போன்ற அடையாளமுடைய மற்ற சபையின் கிளைகளிலிருந்து கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது.

எனவே, நான் அடிக்கடி ஒரு கிறிஸ்தவ பாரம்பரியத்தை ஒரு ஸ்தாபனம், அல்லது சபையின் ஒரு கிளை அல்லது அவர்கள் பல ஆண்டுகளாக பின்பற்றி வரும் பாதைகளாகவோ நினைத்துப் பார்க்கிறேன். அதை ஒரு வீடு என்று அடிக்கடி நினைக்கிறேன். இப்போது, ஒரு வீடு எப்படி இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் தூங்கச் செல்லும் இடம் அது. நீங்கள் சென்று வசதியாக இருக்கும் இடம் இது. நீங்கள் இருக்கும் இடம் அது. உங்கள் வீட்டிற்குள்ளேயே நீங்கள் சில விஷயங்களை மற்றவர்கள் செய்வதிலிருந்து வித்தியாசமாகச் செய்வீர்கள். ஆனால் அது உங்கள் வீடு...



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அதுவே சபையின் கிளைகளாக இருக்கிறது மற்றும் அவை நமக்குக் கொடுக்கும் விதிகள், அவைகள் நமக்குக் கொடுக்கும் கொள்கைகள், அவற்றின் கோட்பாடு சுருக்கங்கள் மற்றும் அவர்கள் நமக்கு உணரச் சொல்லும் வழிகளைப் பற்றி சிந்திக்க மிகவும் உதவியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நமது கிறிஸ்தவ நம்பிக்கையில் நடந்து கொள்ள வேண்டும். இது உங்கள் வீடாக இருப்பது மிகவும் நல்லது, ஏனென்றால் தேவனுக்கு பிரியமான விதத்தில், நம் வாழ்வில் உள்ள இடைவெளிகளை நிரப்பவும், விஷயங்களை மிகவும் கவனமாக சிந்திக்கவும், மகிழ்ச்சியான வழிகளில் வாழவும் கிறிஸ்துவின் சரீரத்தை நாம் அதிகம் சார்ந்திருக்க வேண்டும். ஆனால் அதே சமயம், நமது பாரம்பரிய சபையின் கிளைக்கு வெளியே சென்று, நண்பர்களை உருவாக்கலாம், அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளலாம், மேலும் எங்கள் சொந்த வீடாகிய, சபையின் எங்கள் சொந்த கிளைக்கு வரலாம், மேலும் வேதாகமத்துடன் இணக்கமான வழிகளில் விஷயங்களை மாற்றலாம்.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

இப்போது நாம் கிறிஸ்தவ இறையியல் பாரம்பரியங்கள் என்றால் என்ன என்பதை வரையறுத்துள்ளோம், இறையியல் பாரம்பரியங்களின் சில போக்குகளையும் நாம் கவனிக்க வேண்டும்.

## மரபுகளின் போக்குகள்

பல சபைகள் காலப்போக்கில் வகைப்படுத்தப்பட்ட இறையியல் போக்குகளால் வேறுபடுகின்றன என்பதை நாம் அனைவரும் உணர்கிறோம். கிறிஸ்துவைப் பின்பற்றும் பலர் வெளிப்படையாகவும் சுயநினைவுடனும் ஏதோ ஒரு இறையியல் பாரம்பரியத்தை அடையாளப்படுத்துகிறார்கள். மற்றவர்கள் அப்படி செய்வதில்லை. ஆனால் நாம் உணர்ந்தாலும் இல்லாவிட்டாலும், நாம் அனைவரும் நமது இறையியல் பாரம்பரியத்தால் ஆழமாக தாக்கத்திற்குட்பட்டுள்ளோம். இந்த இறையியல் போக்குகள் நாம் படிக்கும் புத்தகங்கள், நாம் கேட்கும் பிரசங்கங்கள், நாம் கலந்துகொள்ளும் சபைகள் மற்றும் நம்முடைய கிறிஸ்தவ நண்பர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன. இந்த மரபுகள் நம்மீது அதிக தாக்கத்தை செலுத்தாமல் இருக்க வேண்டும் என்று நாம் நம்பினால், இந்த தாக்கங்கள் மற்றும் அவற்றின் பலம் மற்றும் பலவீனங்களை நாம் அறிந்திருக்க வேண்டும்.

முந்தைய பாடத்தில், இறையியலானது சரியான அல்லது உண்மையான கோட்பாடுகள், சரியான நடத்தை அல்லது நடைமுறை, சரியான உணர்வுகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அல்லது உணர்ச்சிகளை உள்ளடக்கியது என்று குறிப்பிட்டோம். இந்த காரணத்தினால், கிறிஸ்தவத்தில் உள்ள பல்வேறு இறையியல் பாரம்பரியங்கள் இந்த மூன்று அல்லது ஒருவேளை இரண்டு வகைகளில் இருக்கிறது என்பதைக் கவனிப்பது உதவியாக இருக்கும்.

சில இறையியல் பாரம்பரியங்கள் மரபுவழியை வலியுறுத்தும் போக்கைக் கொண்டுள்ளன, சிலர் மரபுகளை நேரடியாக செய்யச்சொல்கின்றன, மேலும் சிலர சரியான மரபுகளின் வேதனையை வலியுறுத்துகின்றன. முதலில், சபையின் சில கிளைகள் மரபுவழியை பாரம்பரியமாக வலியுறுத்துவதன் மூலம் மற்றவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைக் கருத்தில் கொள்வோம்.

## பாரம்பரிய கோட்பாடு

நாம் அனைவரும், தங்கள் அடையாளத்தை முதன்மையாக கடைபிடிக்கும் கோட்பாடுகளின் அடிப்படையில் பார்க்கும் பிரிவுகளைப் பற்றி நன்றாக அறிவோம். அவைகளின் போதிக்கும் ஊழியமும், கோட்பாட்டு நிலைப்பாடுகளும் அவைகளின் கிறிஸ்தவ நம்பிக்கையின் இருதயத்தை நிலைப்படுத்துகின்றன. துரதிர்ஷ்டவசமாக, சபையின் இந்த கிளைகள் தன்னுடைய கோட்பாடுகளை கடைபிடித்தே ஆகவேண்டும் என்று இருக்கலாம். அதாவது, அவர்களின் கோட்பாட்டு சர்ச்சைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டதாக இருக்கலாம், மேலும் அவைகள் பொதுவாக ஒரு பெரிய அளவிலான கோட்பாட்டு ஒற்றுமையை வலியுறுத்துவதாகக் கூட இருக்கலாம். கோட்பாடுகளின் மீதான இந்த ஈடுபாடு பெரும்பாலும் அறிவுஜீவித்தனத்திற்கு வழிவகுக்கிறது, அங்கு நம்பிக்கையின் தரவைக் கற்றுக்கொள்வதும் புரிந்துகொள்வதுமே முடிவடைகிறதாக இருக்கும்.

> வேதாகமத்தின் கோட்பாட்டு அல்லது கருத்தியல் பரிமாணங்களை நாம் வலியுறுத்தும்போது, மக்கள் ”அறிவுஜீவி” என்று அழைக்கும் நிலையை தவிர்க்க விரும்புகிறோம். ஆனால் அது புத்தியைத் தவிர்ப்பதோ அல்லது மனதைத் தவிர்ப்பதோ போன்றதல்ல… பவுல் ஆவியானவர் நம் ஆவியுடன் சேர்ந்து சாட்சி கொடுப்பதை மட்டும் பேசவில்லை, ஆனால் அவர் ஆவியின் மனதைப் பற்றி பேசுகிறார். அவர் மனதைப் புதிதாக்குதல் பற்றியும் பேசுகிறார். மனமானது நாம் யார் என்பதன் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. இது தேவன் நமக்குக் கொடுத்த வரத்தின் ஒரு பகுதியாகும், மேலும் நாம் வேதத்தை அணுகும்போது அதைப் பயன்படுத்தலாம்…ஆனால், ”நான் புத்திசாலி, நான் எல்லோரையும் இழிவாகப் பார்க்க முடியும்” என்று சொல்லும் மனம் இருக்கக்கூடாது. நாம் ஒரு பிரசங்கத்தைக் கேட்கும்போதும், சூழலுக்கு அப்பாற்பட்ட ஒரு வேதாகம



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வசனத்தை கேட்கும்போதும், ”ஆ, நான் அவர்களை விட திறைமைசாலி” என்று சொல்லும் மனம் கூட, ஒரு இளம் கிறிஸ்தவராக எனக்கு இருந்த ஒரு சோதனையாகும். ஏனென்றால், சில சமயங்களில் இன்னும் சில மதிப்புமிக்க விஷயங்கள் அங்கே கூறப்படுகின்றன. தேவன் நமக்குக் கற்பிப்பதைக் கற்றுக்கொள்ள தயாராக இருக்கும் மனத்தாழ்மை நமக்கு இருக்க வேண்டும். ஆனால் அந்த மனதை நாம் ஊழியத்தில் பயன்படுத்துகிறோம்.
>
> – Dr. கிரெய்க் எஸ். கீனர்

இரண்டாவதாக, மரபுவழியை வலியுறுத்துவதற்குப் பதிலாக, சபையில் உள்ள மற்ற பாரம்பரியங்கள் தங்கள் நேரடியான செய்கை மரபின் மூலம் தங்களை வேறுபடுத்திக் கொள்ள முனைகின்றன.

## நடை முறை கிறிஸ்தவ வாழ்க்கை

பல சபைகள் தாங்கள் கற்பிப்பதற்கு நேர்மாறாக இருந்து, தாங்கள் செய்யும் செயல்களில் தங்கள் தனித்துவமான அடையாளத்தைக் காண்கின்றன. அவர்களின் கிறிஸ்தவ சேவையும் செயல் திட்டங்களும் அவர்களின் மிகப்பெரிய பலமாக இருக்கிறது. அவர்கள் பெரும்பாலும் தங்கள் உறுப்பினர்களுக்கு செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவைகளின் நீண்ட பட்டியல்களை வைத்திருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக, சபையின் இந்த கிளைகள் பெரும்பாலும் கிறிஸ்தவ நம்பிக்கையை வெறும் நடவடிக்கையாக மட்டுமே குறைத்து பார்க்கிறது. கிறிஸ்தவமானது ஏதோ ஒன்றை செய்யும் காரியமாக மாறுகிறது. மேலும் செயல்பாட்டின் மீதான இந்த முன்கூட்டியே கொண்டுள்ள ஈடுபாடு பெரும்பாலும் சட்டவாதத்திற்கு வழிவகுக்கிறது.

> என்னுடைய சொந்த கிறிஸ்தவ வாழ்க்கையில், கீழ்ப்படிதலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது எப்படி முக்கியமானது என்பதை நான் பார்த்திருக்கிறேன். அதாவது, கிறிஸ்துவானவர் நீங்கள் சென்று, அவர் கட்டளையிட்ட அனைத்தையும் கடைப்பிடிக்கும்படி அவர்களுக்குக் கற்பித்து சீஷர்களை உருவாக்குங்கள் என்று சொன்னார். நான் முதன்முதலில் ஒரு விசுவாசி ஆனபோது, உண்மையில் கிறிஸ்து கற்பித்ததைக் கடைப்பிடிப்பதையும் குறிப்பாக பிரதான கட்டளையை கடைப்பிடிப்பதையும் வலியுறுத்திய விசுவாசிகள் அல்லது கிறிஸ்தவர்களின் குழுவில் சேர்ந்தேன். ஆனால் காலப்போக்கில் அந்த குழுவானது கிருபை மற்றும் அன்பின் உணர்வு மற்றும் சுவிசேஷம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கொடுக்கும் சுயாதீனம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை குறைத்து காட்டினது… அதாவது, தேவனுக்கு கீழ்ப்படிவதன் அடிப்படையில் இருந்திருந்தால், நான் நீண்ட காலத்திற்கு முன்பே நீர்த்துப்போயிருப்பேன். அன்பின் உணர்வு, கிருபையின் உணர்வு, தோல்விக்கான சுயாதீன உணர்வு ஆகியவையும் முக்கியம்… எனவே, நமக்கு கீழ்ப்படிதல் மிகவும் அவசியம் என்று நினைக்கிறேன். நாம் நம் வாழ்க்கையை எப்படி வாழ்கிறோம் என்பதைப் பற்றி நாம் அக்கறை கொள்ள வேண்டும், சுவிசேஷம் மட்டுமே உங்களை ஒரு விதத்தில் விடுவித்து, அந்த சட்டவாதமானது ஒருபோதும் கொடுக்கமுடியாத வகையில் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறது.
>
> – Rev. ஃபிராங்க் சிண்ட்லர்

மூன்றாவதாக, மற்ற இறையியல் பாரம்பரியமானது, மரபுவழி அல்லது நேரடியான செய்கை மரபின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் அல்ல, மாறாக அவற்றின் சரியான அனுபவத்திலிருந்து வேறுபடுத்திக் கொள்கின்றன.

## சரியான உணர்ச்சிகள் அல்லது உணர்வுகள்

கிறிஸ்தவ விசுவாசத்தின் உணர்ச்சிப் பரிமாணம் இந்த சபைகளில் மைய கட்டமாகும். மதப் பாசங்கள் மிகவும் மதிக்கப்படுகின்றன, அதனால் பல நேரங்களில் சிறிய காரியங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த கிறிஸ்தவர்கள் கோட்பாட்டைப் பற்றி கவலைப்பட விரும்பவில்லை. அந்த நடத்தைகள் அவர்களை நன்றாக உணரச் செய்யாவிட்டால், அவர்கள் சில வகையான நடத்தைகளைப் பின்பற்ற விரும்புவதில்லை. இந்த காரணத்திற்காக, இந்த வகையான சபைகள் உணர்ச்சிவாதத்தால் வகைப்படுத்தப்படுவது அசாதாரணமானது அல்ல.

> நான் அசெம்பளி ஆப் காட் சபைகளில் வளர்ந்தேன், இந்த சபைகள் பல வழிகளில் தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட நாம் யார் என்ற உணர்ச்சிப் பக்கத்தை சரியாக மதிக்கும் ஒரு பாரம்பரியமாகும். ஆனால், ஒரு விஷயத்தை மதிக்கும் சில மரபுகள் தவறாகப் போகும்போது, அதை மிகையாக மதிப்பிடுவதன் மூலம் அவர்கள் அதைச் செய்ய முடியும். நான் பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது தான் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட முழு மனிதர்களாக நாம் இருக்கிறோம் என்பதைப் பற்றி இன்னும் கொஞ்சம் உணரத் தொடங்கினேன். நம் அனைவருக்கும் உணர்ச்சி மட்டுமல்ல அறிவாற்றல் மற்றும் நாம் யார்

> என்பதற்கான விருப்ப பரிமாணமும் உள்ளன. நாம் யார் என்ற இந்த மூன்று பரிமாணங்களைப் பற்றி வேதாகமம் பேசும் விதத்தை நான் உணர்ந்து, நம் மனங்களுக்கும் நமது விருப்பங்களுக்கும் இடையிலான உறவைப் பற்றி பேசும் விதம், பரஸ்பரம் சார்ந்திருப்பது, இணைதிற வாழ்வு ஆகியவற்றைப் பற்றி உணர்ந்தேன். இணைதிற வாழ்வு என்பது இரண்டு வழிகளிலிருந்தும் வருகிற உறவாகும். சில நேரங்களில் நமது உணர்ச்சிகள் சரியான சிந்தனையிலிருந்து எழுகின்றன. ஆனால் உண்மையில், சில நேரங்களில் சரியான சிந்தனை உணர்ச்சிகளிலிருந்து எழுகிறது, சரியான உணர்ச்சிகளிலிருந்து, சரியான உணர்வு எழுகிறது. சில நேரங்களில் நமது உணர்ச்சிகள் நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதைத் தெரிவிக்கின்றன. சில நேரங்களில் நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பது நம் உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. எனவே, நாம் யார் என்ற இந்த மூன்று பரிமாணங்களும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று விஷயங்களை பரிமாறிக்கொள்கின்றன. அது நான் யார், மற்றவர்கள் யார் என்பதை நான் எப்படி உணர்கிறேன் என்பதன் அடிப்படையில் என்னை சமநிலைப்படுத்த உதவியது.
>
> – Dr. எம். பி.

ஒவ்வொருவரும் கிறிஸ்தவ மரபுகளின் போக்குகளை வெவ்வேறு வழிகளில் மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் இறையியல் மரபுகள் பொதுவாக இந்த நோக்குநிலைகளில் ஒன்று அல்லது இரண்டை வலியுறுத்துவதன் மூலம் அவற்றின் அடையாளங்களைக் கண்டுபிடிக்கின்றன என்று சொல்வது நியாயமானது.

இப்போது நாம் கிறிஸ்தவ மரபுகளின் கருத்தை வரையறுத்து, அத்தகைய மரபுகள் வழக்கமாக வெளிப்படுத்தும் போக்குகளின் வகைகளைப் பார்த்தோம், இறையியலைக் கட்டியெழுப்புவதில் இந்த பாடங்களுக்கு இறையியல் மரபுகள் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தை நாம் பார்க்க வேண்டும்.

## மரபுகளின் முக்கியத்துவம்

எளிமையாகச் சொன்னால், மரபுகளின் முக்கியத்துவம் பற்றிய ஒரு விழிப்புணர்வானது பின்வரும் இரண்டு முக்கியமான பாத்திரங்களை வகிக்கிறது: முதலாவதாக, அது நம்மைப் பற்றி மேலும் புரிந்துகொள்ள உதவுகிறது; இரண்டாவதாக, இது மற்றவர்களைப் பற்றி மேலும் புரிந்துகொள்ள



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நமக்கு உதவுகிறது. இறையியல் மரபுகளின் வெளிச்சத்தில் நம்மை நாம் எப்படிப் பார்க்க வேண்டும் என்பதைப் பற்றி ஒரு கணம் யோசிப்போம்.

## நம்மைப் பற்றிய விழிப்புணர்வு

சமீபத்திய தசாப்தங்கள் வரை, முன்னணி மதச்சார்பற்ற தத்துவவாதிகள், உண்மையைத் தேடுவதற்கு பாரம்பரியத்தின், குறிப்பாக மத மரபின் தளைகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர். இந்த கண்ணோட்டம் மேற்கத்திய கலாச்சாரங்களில் மிகவும் செல்வாக்கு பெற்றது, அதனால் நன்கு அர்த்தமுள்ள சுவிசேஷ கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் அதை ஏற்றுக்கொண்டுள்ளனர். நன்கு ஸ்தாபிக்கப்பட்ட இறையியல் மரபிலிருந்து எடுத்துக்கொள்வதன் மூலம் மதிப்பை உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக, வேதவாக்கியத்தில் தேவன் வெளிப்படுத்திய சத்தியத்தை நாம் பின்தொடரும்போது எல்லா மரபுகளையும் ஒதுக்கித் தள்ளுவது போல் நாம் செயல்படுகிறோம்.

மரபுகள் நமது இறையியலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடாது என்ற கருத்து அறிவொளி நவீனத்துவத்தின் பல முன்னோக்குகளால் மிகவும் பிரபலமானது மற்றும் ஆதரிக்கப்பட்டது. அறிவொளி நவீனத்துவ காலத்திலிருந்து வேதத்தைப் பற்றிய தீவிர கல்வியியல் ஆய்வின் குறிக்கோளானது, இறையியல் தப்பெண்ணங்கள் மற்றும் மரபுகளிலிருந்து விடுவித்துக் கொள்வதாக இருந்தது. கிறிஸ்தவ விசுவாசத்தின் பகுத்தறிவைப் பாதுகாக்கும் முயற்சியில் இது டெஸ்கார்ட்டேசின் வழிமுறையாக இருந்தது என்பதை நீங்கள் நினைவில் கொள்வீர்கள். டெஸ்கார்ட்டேஸ் எல்லாவற்றையும் சந்தேகித்தார், இதனால் அவரால் அறிவை வெறும் நம்பிக்கையிலிருந்து தெளிவாக வேறுபடுத்திக் காட்ட முடிந்தது. மூடநம்பிக்கை, வெறும் மதப் பாரம்பரியம் போன்ற நம்பிக்கைகள் புறநிலையான, பகுத்தறிவு உண்மையைத் தேடுவதில்லை என்று நிராகரிக்கப்பட்டன.

பல வழிகளில், தங்கள் மத பாரம்பரியத்திலிருந்து அல்லது அவர்களின் குறிப்பிட்ட கிறிஸ்தவ இறையியல் பாரம்பரியத்திலிருந்து தங்களை பிரித்துக்கொள்ள விரும்பும் மாணவர்கள் அறிவொளி மற்றும் கார்ட்டீசியன் தரங்களை இறையியலுக்குப் பயன்படுத்துகின்றனர். துரதிர்ஷ்டவசமாக, சமீபத்திய நூற்றாண்டுகளில் மேற்கத்திய சபையில் நாம் பார்த்த விசுவாச துரோகத்தின் பெரும்பகுதிக்கு இறையியலுக்கான இந்த அணுகுமுறை பொறுப்பாகும். நவீன தாராளவாதம் என்பது இந்த நவீனத்துவ அறிவொளி நிகழ்ச்சி நிரலை இறையியலுக்குப் பயன்படுத்துவதன் விளைவாகும். ஆனால் இறையியல் மரபுகளை சமாளிக்க ஒரு சிறந்த வழி உள்ளது. மாறாக நம்முடைய இறையியல் நோக்குநிலைகளில் இருந்து நம்மைப் பிரிக்கும் முயற்சியை விட, சுய விழிப்புணர்வை அடைய முயற்சி செய்வது மிகவும் உதவியாக இருக்கும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நாம் ஒரு இறையியலை உருவாக்கும்போது தொடர்ந்து நம்மை பாதிக்கும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பாரம்பரியத்தைப் பற்றி மேலும் மேலும் தெரிந்துகொள்வது நமக்கு நன்மை பயக்கும். சுய விழிப்புணர்வானது இந்த தாக்கங்களில் சிலவற்றை மதிப்பிடுவதற்கும் நிர்வகிப்பதற்கும் நமக்கு உதவுகிறது.

> நாம் கலாச்சாரங்கள் மற்றும் உலகப் பார்வைகளின் வரம்பிற்குள் உள்ளோம். நாம் வெற்றுப் பலகையோ அல்லது வெறும் எழுத்துப்பலகையோ அல்ல. நாம் வேதாகமத்திற்குள் நம்முடைய சொந்த முன்முடிவுகளையும் சொந்த முன் எண்ணங்களையும் நிறைய நுழைக்கிறோம் … ஆனால் என் ஸ்தாபனம், பிற ஸ்தாபனங்கள், என் முந்தைய போதனைகள், என் பெற்றோர்கள், என் நண்பர்கள், உலகம் என பல காரணிகளால் நாம் பாதிக்கப்படுகிறோம் என்பதைப் புரிந்துகொள்கிறோம், எல்லா வழிகளிலிருந்தும், வடிவங்களிலிருந்தும், நவநாகரீகங்களிலிருந்தும் வரும் தகவல்களால் நாம் தாக்கப்படுகிறோம், மேலும் அந்த விஷயங்கள் அனைத்தும் நான் வேதாகமத்தை எவ்வாறு விளக்குகிறேன் என்பதை பாதிக்க முடியும். எனவே, நான் மீண்டும் அங்கு செல்லும்போது, என் சொந்த பாவ இயல்பையும் என் இருதயத்தின் ஆசைகளையும் புரிந்து கொண்டு, நான் மனத்தாழ்மையுடனும் பயபக்தியுடனும் செல்ல வேண்டும், ஒருவேளை சில விஷயங்களை நான் மாற்ற வேண்டும். எனவே, இப்போது, என் எண்ணங்களுக்கும் பரிசுத்த ஆவியானவர் எனக்கு உணர்த்தும் எண்ணங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை கண்டறிவது எப்படி? எனவே, நான் வியாக்கியானம் செய்வது குறித்த கருவிகளை அறிந்திருக்க வேண்டும். எல்லாவற்றையும் விட, நமது பரிசுத்த பிதாவின் மேல் பயபக்தியையும் மரியாதையையும் கடைப்பிடிக்க வேண்டும்.
>
> – Dr. தாடியஸ் ஜே.ஜேம்ஸ், Jr.

நம்மை நாமே ஒரு சில கேள்விகளைக் கேட்பது மிகவும் உதவியாக இருக்கும். முதலாவதாக, சபையின் எந்தக் கிளையை நீங்கள் வீடு என்று அழைக்கிறீர்கள்? நீங்கள் ஒரு ஸ்தாபனத்தின் அடிப்படையில் அல்லது ஒருவித இயக்கத்தின் அடிப்படையில் சிந்திக்கலாம். இது ஒரு முறையான அல்லது முறைசாரா சங்கமாக இருக்கலாம். ஒருவேளை நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மரபுகள் அல்லது மரபுகளின் கலவையை கடைபிடிக்கிறவர்களாக இருக்கலாம்.

இதற்கு அப்பால், உங்கள் பாரம்பரியத்தின் பொதுவான போக்குகள் என்ன? உங்களுடைய சபை முதன்மையாக பாரம்பரிய கோட்பாடு, நடைமுறை இறையியல் அல்லது சரியான உணர்ச்சிகள் அல்லது உணர்வுகளை வலியுறுத்துகிறதா? வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நீங்கள் கோட்பாடு, நடத்தை அல்லது உணர்ச்சிகளைப் பற்றி அதிகம் கவலைப்படுகிறீர்களா? உங்கள் விசுவாசத்தில் எது உங்களைத் தூண்டுகிறது? கிறிஸ்துவுக்குள் உங்கள் வாழ்க்கையை எது உயிர்ப்பிக்கிறது? இந்த அடிப்படை போக்குகளை நீங்கள் அடையாளம் கண்ட பிறகு, இது போன்ற கேள்விகளைக் கேட்பதன் மூலம் உங்கள் பாரம்பரியத்தின் தன்மையை மேலும் அடையாளம் காணத் தொடங்கலாம்: எந்த வகையான கோட்பாடுகள் மிக முக்கியமானவை? எந்த நடத்தைகள் மிகவும் வலியுறுத்தப்படுகின்றன? என்ன உணர்ச்சிகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று கருதப்படுகின்றன? இந்த வகையான கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்க முடியும் போது, நீங்கள் உங்கள் சொந்த கிறிஸ்தவ இறையியலை உருவாக்குகையில் உங்கள் சொந்த பின்னணியானது ஏற்படுத்தும் தாக்கங்களை நிர்வகிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இப்போது இறையியல் மரபுகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொள்ளும்போது, நம்மைப் பற்றிய விழிப்புணர்வும், நமது மரபுகள் நம்மீது ஏற்படுத்தும் விளைவுகளும் இன்றியமையாதவை, ஆனால் மரபுகள் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் பற்றிய விழிப்புணர்வையும் நாம் கொண்டிருக்க வேண்டும்.

## மற்றவர்களின் விழிப்புணர்வு

மற்ற விசுவாசிகளுடன் நாம் இறையியலைப் பற்றி விவாதிக்கும் போதெல்லாம், நம்முடையவைகள் நம்மைப் பாதிப்பதைப் போலவே, அவர்களுடைய சகவாசங்களும் அவர்களுடைய மரபுகளும் அவர்களைப் பெரிதும் பாதிக்கின்றன என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் சார்ந்திருக்கும் இறையியல் நீரோட்டமானது அவர்களுடைய பல நம்பிக்கைகளையும் விளக்க முடியும். இதன் பொருள் என்னவென்றால், மற்ற கிறிஸ்தவர்கள் நம்முடைய சொந்த நோக்கத்திலிருந்து மிகவும் வேறுபட்ட நோக்கத்தைக் கொண்டிருக்கலாம். அவர்கள் வெவ்வேறு முன்னுரிமைகள், பலம் மற்றும் பலவீனங்களைக் கொண்டிருக்கலாம். மற்றவர்களைப் பற்றிய இதை நாம் எவ்வளவு அதிகமாக அங்கீகரிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நமது தொடர்புகள் பலனளிக்கக் கூடியவையாக இருக்க முடியும், மேலும் தேவையற்ற பிளவுகளைத் தவிர்க்கவும் முடியும்.

> மற்ற விசுவாசிகள் அல்லது பிற சபைகளின் இறையியல் பாரம்பரியத்தைப் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமானது, ஏனென்றால், இன்று நாம் பார்க்கக்கூடியபடி, சபையானது பிளவுபட்டுள்ளது,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஸ்தாபனத் தடைகளும் உள்ளன, பெரும்பாலான நேரங்களில் அது அனைத்து பிரிவுகளும் எல்லா உபதேசங்களிலும் ஒத்துப்போக வேண்டியதில்லை, ஆனால் அது நம்முடைய சபைகளில் நாம் கொண்டிருக்கும் மரபுகளை அமைப்பதுடன் தொடர்புடையது. அது நமக்கும் மற்ற கிறிஸ்தவர்களுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக்கும் இடையே ஒரு பயனுள்ள தொடர்பு வேண்டும் என்றால், நாம் அவர்களுடைய பாரம்பரியங்களை தெரிந்து வைத்திருப்பது மிகவும் முக்கியமானதாகும். இது அவர்களின் பாரம்பரியத்தை அறிவது மட்டுமல்ல, ஆனால் சில நேரங்களில் அவர்கள் ஏன் அந்த பாரம்பரியத்தை பின்பற்றி நம்புகிறார்கள் என்பதை அறிவது முக்கியமாகும் … அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை மதிப்பது, ஒரு விதத்தில், இரு தரப்பினரும் அர்த்தமுள்ள தொடர்புகளைக் கொண்டிருப்பதற்கு வழிவகுக்கும், இது அவர்கள் இருவருக்கும் பயனளிக்கும், மேலும் தேவனுடைய ஊழியத்தை ஒன்றாகச் செய்வதையும், தேவனுடைய ராஜ்யத்தில் ஒன்றாக வேலை செய்வதையும் மேம்படுத்தும்.
>
> – Rev. Dr. ஹும்பிரெ அகோக்யெரம்

கிறிஸ்தவ இறையியல் பற்றிய நமது முன்னோக்கை வரையறுத்து, ஒரு இறையியலைக் கட்டியெழுப்பும் செயல்முறையில் குறிப்பிட்ட இறையியல் மரபுகள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, நாம் நமது மூன்றாவது தலைப்பான சீர்திருத்தப்பட்ட பாரம்பரியத்திற்குத் திரும்ப வேண்டும். நாம் இந்த விஷயத்தைக் கையாள வேண்டும், ஏனென்றால் இந்தப் படிப்பினைகள் பெரும்பாலும் சீர்திருத்தப்பட்ட அல்லது சீர்திருத்த இறையியல் என அடையாளம் காணப்பட்ட இறையியல் முன்னோக்குகளால் ஆழமாகப் பாதிக்கப்படும்.

# சீர்திருத்த பாரம்பரியம்

இறையியலின் எழுத்தாளர்களும் ஆசிரியர்களும் தங்கள் இறையியல் கண்ணோட்டங்களின் நோக்குநிலையைப் பற்றி முடிந்தவரை திறந்த மனதாய் இருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். நாம் வேதவாக்கியங்களைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

படிக்கும்போது வெறுமனே வெற்றுப் பலகைகளாகப் போவதுபோல யாருக்கும் எந்த நன்மையும் செய்யாது. நிச்சயமாக, நாம் ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவ பாரம்பரியத்தை கீழ்ப்படிதலுடன் கடைப்பிடிக்கக்கூடாது. வேதாகமத்தின் முழு அதிகாரத்திற்கும் கீழ்ப்படிய நாம் எப்பொழுதும் முயற்சிக்க வேண்டும். ஆயினும்கூட, குறைந்தபட்சம், ஏதோவொரு சபையில் ஏறக்குறைய நம்மை அதிகமாகவோ குறைவாகவோ ஒருங்கிணைக்கும் முன்னுரிமைகள் மற்றும் முக்கியத்துவங்கள் நமக்கு உள்ளன. இது உண்மை என்று ஆசிரியர்கள் ஒப்புக்கொள்ளும் போது, தங்கள் மாணவர்கள் தங்களிடமிருந்து என்ன படிக்கிறார்கள் அல்லது கேட்கிறார்கள் என்பதை மதிப்பிடுவதற்கு சிறந்த முறையில் தயாராக உள்ளனர்.

சீர்திருத்த பாரம்பரியத்தின் வரையறைகளை ஆராய, நாம் மூன்று விஷயங்களைப் பார்ப்போம்: முதலாவதாக, இந்த சபையின் வரலாற்று தோற்றம் மற்றும் வளர்ச்சி; இரண்டாவதாக, சீர்திருத்த இறையியலின் போக்குகள்; மூன்றாவதாக, அதன் இறையியல் தனித்துவங்களில் சில. சீர்திருத்த பாரம்பரியத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சிகளை முதலில் பார்ப்போம்.

## தோற்றம் மற்றும் வளர்ச்சிகள்

"சீர்திருத்த இறையியல்" என்ற சொல் 16 ஆம் நூற்றாண்டின் புராட்டஸ்டன்ட் சீர்திருத்தத்திலிருந்து வந்தது, ஆனால் பல்வேறு இறையியல் இயக்கங்கள் புராட்டஸ்டன்ட் சீர்திருத்தத்தை உள்ளடக்கியதாக இருக்கின்றன. ஜெர்மனியில் லூதரன்களும், சூரிச்சில் ஸ்விங்லியன்களும், ஜெனீவாவில் கால்வினிஸ்டுகளும் மிக முக்கியமான குழுக்களில் அடங்குவர். பரந்த அர்த்தத்தில் இந்த மூன்று இயக்கங்களையும் சீர்திருத்தம் என்று நாம் பேசலாம் என்றாலும், "சீர்திருத்தம்" என்ற சொல் முதன்மையாக மூன்றாவது குழுவிற்குப் பொருந்தும் - அதாவது ஜான் கால்வினின் இறையியலால் ஆழமாக பாதிக்கப்பட்ட புராட்டஸ்டன்ட்களுக்கு இது பொருந்தும்.

இந்த மாதிரியான சபையானது எந்த வகையிலும் ஜெனீவாவுடன் மட்டுப்படுத்தப்படவில்லை. சீர்திருத்தத்தின் நாட்களில், சீர்திருத்த சபைகள் மிகவும் சுவிசேஷ மையமாக இருந்தன, மேலும் மேற்கு ஐரோப்பா முழுவதும் மற்றும் அதற்கு அப்பாலும் பரவின. கால்வினே ஒரு பிரெஞ்சுக்காரர். அவருடைய மாணவர்களில் பலர் பிரெஞ்சு ஹுகுனட் இயக்கத்தை வழிநடத்த உதவினர். இந்த இளம் ஊழியர்கள் தங்கள் ஊழியத்தின் ஆரம்ப தசாப்தங்களில் மிகுந்த துன்புறுத்தலுக்கு ஆளானார்கள். ஆனால் ஜெனீவாவின் இறையியல் மிகவும் வலுவாக இருந்ததால், மேலும் மேலும் இளைஞர்கள் பிரான்சிற்குள் கிறிஸ்துவின் சபையைக் கட்டுவதற்காகச் சென்று கொண்டிருந்தனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சீர்திருத்த இயக்கம் ஐரோப்பா முழுவதும் தொடர்ந்து வளர்ந்தது. ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, ஹங்கேரி மற்றும் பிற நாடுகளில் சபைகள் ஆயிரக்கணக்கில் தோன்றின. ஆரம்பகால சீர்திருத்த இறையியலின் பல முக்கிய காரியங்கள் குறிப்பிடப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, 1561-ல் பெல்ஜியம் ஒப்புதல் வாக்குமூலமும், 1563-ல் ஹைடெல்பெர்க் காடெகிசமும் சீர்திருத்த சபையில் பெரும் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. இவை ஜெனீவாவில் கற்பிக்கப்பட்ட இறையியல் முறையின் ஆரம்பகால விளக்கக்காட்சிகளில் சிலவாகும். கூடுதலாக, ஐரோப்பாவில் சீர்திருத்தப்பட்ட பாரம்பரியத்தின் ஒரு வலுவான கை டச்சு சீர்திருத்த சபையாகும். அர்மினிய சர்ச்சையைக் கையாள்வதற்காக 1618 முதல் 1619 வரை சந்தித்த டார்ட் ஆலோசனை சங்கத்தில் இது ஒருவேளை நன்கு அறியப்பட்டிருக்கலாம் - அர்மினியஸின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு கால்வினிசத்திலிருந்து பிரிந்த போனதே அர்மீனியன் இயக்கமாகும்.

> சீர்திருத்த சபையின் ஆரம்பகால திருமறைச்சுவடிகளில் ஒன்று ஹைடெல்பர்க் திருமறைச்சுவடி ஆகும். நான் அந்த திருமறைச்சுவடியை விரும்புகிறேன், ஏனென்றால் அது பெரும்பாலும் வலியுறுத்தப்படாத சீர்திருத்த இறையியலைப் பற்றி ஏதாவது வெளிப்படுத்துகிறது. சீர்திருத்த இறையியலானது சில நேரங்களில் நம்பிக்கைகளின் மிகவும் கோட்பாட்டுத் தொகுப்பாகக் கருதப்படுகிறது, மேலும் நடைமுறை வாழ்க்கை மற்றும் கிறிஸ்தவர்களின் அன்றாட அனுபவத்தைப் பற்றி உண்மையில் கவலைப்படவில்லை. ஆனால் ஹைடெல்பர்க் திருமறைச்சுவடி பின்வருமாறு தொடங்குகிறது: ”வாழ்விலும் மரணத்திலும் உங்கள் ஒரே ஆறுதல் என்ன?” ”வாழ்விலும் மரணத்திலும் உங்கள் ஒரே ஆறுதல் என்ன?” இப்போது, நீங்கள் அந்த திருமறைச்சுவடியானது எழுதப்பட்ட போது, அது சீர்திருத்த கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படும் ஒரு சூழலில் எழுதப்பட்டது என்று தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் அதிக எண்ணிக்கையில் தங்கள் விசுவாசத்திற்காக மரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய நம்பிக்கைக்காகவும் அவர்கள் நிலையாக நின்ற காரியங்களுக்காகவும் தொடர்ந்து துன்புறுத்தப்படுவார்கள் மற்றும் மரிப்பார்கள் என்று இருந்தது. சபையின் ஆரம்ப நாட்களில் இருந்த திருமறைச்சுவடியின் ஆரம்பத்தில், ”வாழ்விலும் சாவிலும் எங்கே ஆறுதலை நீ காண்கிறாய்?” என்கிற கேள்வியைப் பார்ப்பது ஆச்சரியமாய் இருக்கிறது. இதற்கான பதிலானது இயேசு மற்றும் பிதா உங்கள் தலையில் இருக்கிற முடிகளின் எண்ணிக்கையை அறிந்திருக்கிறார் என்கிற உண்மையில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> உள்ளது மேலும் உங்கள் வாழ்க்கையில் அவரது கவனிப்பு மற்றும் அவரது பாராமரிப்பை தாண்டி வேறு எதுவும் உங்களுக்கு நடக்க முடியாது. ஆனால் குறைந்தபட்சம் அதன் ஆரம்ப கட்டங்களிலும், பின்னரும், இந்த சபையானது நம் விசுவாசத்தில் உணர்ச்சிகளின் பங்கைப் பற்றி மிகவும் அக்கறை கொண்டிருந்தது என்பதை உணர்வது ஒரு அற்புதமான விஷயமாகும்.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

சீர்திருத்த பாரம்பரியமும் பிரிட்டனின் தீவுகளில் கணிசமாக வளர்ந்தது. 1505 முதல் 1572 வரை வாழ்ந்த ஜான் நாக்ஸ், ஜெனீவாவில் பயின்று ஸ்காட்லாந்தில் சீர்திருத்த அல்லது பிரஸ்பிடேரியன் சபைகளை நிறுவத் திரும்பினார். 1560 ஆம் ஆண்டின் ஸ்காட்லாந்தின் ஒப்புதல் வாக்குமூலம் அக்காலத்திலிருந்து நன்கு அறியப்பட்ட ஒரு ஆவணமாகும். சீர்திருத்தம் இங்கிலாந்திலும் வேரூன்றியது. அங்கு ப்யூரிட்டன்கள் மற்ற குழுக்களுடன் சேர்ந்து 1646 இல் வெஸ்ட் மினிஸ்டர் விசுவாச அறிக்கை என்ற நூலை எழுதி, 1647இல் பெரிய மற்றும் குறுகிய காலக் காப்பியங்களையும் வெளியிட்டனர். வேதாகம மேற்கோள்கள் 1648 இல் சேர்க்கப்பட்டன. தி வெஸ்ட்மின்ஸ்டர் ஸ்டாண்டர்ட்ஸ் என்று அழைக்கப்படும் இந்த ஆவணங்கள் இன்றும் பல சீர்திருத்தப்பட்ட சபைகளில் பயன்படுத்தப்படுகின்றன. பிரிட்டிஷ் தீவுகளில் இருந்த பல்வேறு பாப்டிஸ்ட் குழுக்களும் தங்களை சீர்திருத்த மரபின் ஒரு பகுதியாகக் கருதி, 1644 இல் முதன்முதலில் வெளியிடப்பட்ட லண்டன் பாப்டிஸ்ட் விசுவாச அறிக்கை போன்ற ஆவணங்களில் தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தின.

சீர்திருத்த பாரம்பரியம் உலகின் பல பகுதிகளுக்கும் பரவியது. ஆங்கிலேயப் பியூரிட்டன்களும், பின்னர் ஸ்காட்லாந்தை சேர்ந்த பிரஸ்பிடேரியன்களும் வட அமெரிக்காவிற்கு அதைக் கொண்டுவந்தனர். மிஷனரி ஊழியங்கள் ஆப்பிரிக்கா, இந்தோனேசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் தென் அமெரிக்காவின் பல பகுதிகளுக்கும் அதைக் கொண்டு சென்றன.

அதன் வரலாற்றின் ஒவ்வொரு படியிலும், சீர்திருத்த இறையியலுக்கு அதன் தனித்துவமான பண்புகளை வழங்கிய பல வளர்ச்சிகள் இருந்தன. மேலும், மற்ற சபைகளில் இருப்பதைப் போலவே, சீர்திருத்த சபைகளில் கடுமையான தோல்விகளும் விசுவாசதுரோகமும் இருந்துள்ளன. கிறிஸ்துவின் சரீரத்தின் இந்தப் பகுதியை இன்னும் பாடுகள் வாட்டி வதைக்கின்றன. ஆனால் இன்று, துடிப்பான, ஆரோக்கியமான வேதாகம சீர்திருத்த இறையியல் உலகின் கிட்டத்தட்ட ஒவ்வொரு பகுதியிலும் கற்பிக்கப்பட்டு வாழ்ந்து வருகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இப்போது நாம் சீர்திருத்த சபையின் வரலாற்று தோற்றம் மற்றும் வளர்ச்சிகளைப் பற்றி கொஞ்சம் அறிந்திருக்கிறோம், அதன் இறையியல் போக்குகளைப் பார்ப்போம்.

## போக்குகள்

இந்தப் பாடத்தில், கிறிஸ்தவ மரபுகளுக்குப் பலங்கள் இருந்தாலும், அவற்றுக்குப் பலவீனங்களும் உண்டு என்பதை நாம் சுட்டிக் காட்டினோம். உண்மையில், நமது மிகப்பெரிய பலம் நமது மிகப்பெரிய பலவீனமாக மாறுகிறது என்பது அடிக்கடி நிகழ்கிறது. நாம் அறிந்தபடி, கடந்த காலத்தில் பெரிய தலைவர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் கூட மனித பலவீனங்களைக் கொண்டிருந்தனர். நமது சமகாலச் சூழலிலும் இது உண்மைதான். எனவே, இந்தத் தொடரை வழிநடத்தும் இறையியல் நீரோட்டத்தின் சில நேர்மறை மற்றும் எதிர்மறை போக்குகள் யாவை?

கிறிஸ்தவ மரபுகளில் உள்ள போக்குகளைப் பற்றிய நமது முந்தைய விவாதத்தின் அடிப்படையில், சீர்திருத்த இறையியலாளர்கள் பாரம்பரிய கோட்பாடு, நடைமுறை இறையியல் அல்லது சரியான உணர்ச்சிகள் மற்றும் உணர்வுகள் இவைகளில் எதை அதிகம் மதிக்கிறார்கள் என்று நாம் கேட்க வேண்டும். பல நூற்றாண்டுகளாக, சில அரிய விதிவிலக்குகளுடன், சீர்திருத்த பாரம்பரியம் முதன்மையாக நடைமுறை இறையியலுக்கு இரண்டாம் நிலை முக்கியத்துவம் அளித்து, பாரம்பரிய கோட்பாட்டிற்கு முதலிடத்தை அளித்துள்ளது என்பது தெளிவாகிறது. சில பியூரிட்டன் எழுத்துக்களைத் தவிர, சரியான உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளைப் பற்றிய காரியம் அதிக கவனத்தைப் பெறவில்லை.

நடைமுறை இறையியலுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கோட்பாடும் கடமையும் வலியுறுத்தப்படும்போது, கோட்பாட்டிற்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் அறிவுஜீவித்துவத்தையும், கடமைக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம் சட்டவாதத்தையும் நோக்கியே செல்கிறது. பாரம்பரிய வாதம் மற்றும் நடைமுறை இறையியல் ஆகியவை சீர்திருத்த இறையியலின் இயல்பான போக்குகளாகும், மேலும் இவை இரண்டும் கிறிஸ்துவின் சரீரத்தின் இந்த பகுதிக்கு பலங்களும் பலவீனங்களும் ஆகும். எனவே, நன்மைக்காக அல்லது கெடுதிக்காக, இந்தப் படிப்பினைகள் மீது இந்த மரபுகள் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதால், இந்தப் போக்குகள் இந்தப் பாடங்களில் பலமாகவும் பலவீனங்களாகவும் திரும்பத் திரும்பத் தோன்றும்.

சீர்திருத்த பாரம்பரியத்தின் தோற்றம் மற்றும் போக்குகளை கருத்தில் கொண்டோம். குறிப்பாக இந்த பாரம்பரியம் இறையியலின் மற்ற அம்சங்களை விட கோட்பாட்டை வலியுறுத்துவதால், நாம் அதன் மிகவும் முக்கியமான கோட்பாட்டு தனித்துவங்களில் சிலவற்றைப் பார்க்க வேண்டும். இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அம்சங்களைப் புரிந்துகொள்வது இந்த பாடங்களில் முன்வைக்கப்பட்டுள்ள கண்ணோட்டங்களை இன்னும் முழுமையாக மதிப்பீடு செய்ய உதவும்.

# தனித்துவங்கள்

இந்த சபையை குணாதிசயப்படுத்தும் நான்கு கோட்பாட்டு நிலைப்பாடுகளை நாம் குறிப்பிடுவோம்: முதலாவதாக, சீர்திருத்தத்தின் "ஐந்து சோலாக்கள்" என்று ஆங்கிலத்தில் அறியப்பட்டவைகளைப் பார்ப்போம்; இரண்டாவதாக, வேதாகமத்தின் ஐக்கியத்தைப் பற்றி பார்ப்போம்; மூன்றாவது, தேவனைப் பற்றிய கோட்பாட்டைப் பார்ப்போம்; நான்காவதாக, கிறிஸ்தவத்திற்கும் மனித கலாச்சாரத்திற்கும் இடையிலான உறவைக் குறித்த ஒரு தனித்துவமான அணுகுமுறையைப் பார்ப்போம். முதலில் சீர்திருத்த இறையியலின் ஐந்து *சோலாக்களைப்* பார்ப்போம்.

## ஐந்து சோலாஸ்

20 ஆம் நூற்றாண்டிலிருந்து, ஐந்து சோலாக்கள் அல்லது லத்தீன் மொழியில் சோலேவைப் பற்றி பேசுவது பொதுவானதாகிவிட்டது. இந்தக் கோட்பாடுகள் அனைத்தும் "சோலா" என்ற சொல்லின் வடிவங்களைக் கொண்டிருக்கின்றன, அதாவது "தனியாக" அல்லது "மட்டும்" என்று பொருள்படும் வாக்கியங்களில் பாரம்பரியமாக சுருக்கப்பட்டுள்ளன. சோலா ஸ்கிரிப்ச்சரா, அதாவது "வேதாகமம் மட்டுமே"; சோலோ கிறிஸ்டோ, "கிறிஸ்து ஒருவரே"; சோலா ஃபிடே, "விசுவாசம் மட்டுமே"; சோலா கிரேசியா, "கிருபை மட்டுமே"; மற்றும் சோலி டியோ குளோரியா, "தேவனுக்கு மட்டுமே மகிமை" என பெரும்பாலான சுவிசேஷ சபையார் இவற்றில் குறைந்தபட்சம் சிலவற்றைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

*சோலா ஸ்கிரிப்ச்சரா* என்பது விசுவாசம் மற்றும் வாழ்க்கையின் ஒரே பிழையற்ற விதியானது வேதம் என்ற கோட்பாடாகும். வேதாகமத்தை அல்லாமல், சபை மட்டும் தான் ஒரு பிழையற்ற பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது என்ற ரோம கத்தோலிக்க நம்பிக்கைக்கு மாறாக இது நிற்கிறது, இது பொது ஆலோசனை சங்கங்கள் மூலமாகவோ அல்லது போப் மூலமாகவோ வெளிப்படுத்தப்படலாம்.

தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இயேசு கிறிஸ்து மட்டுமே மத்தியஸ்தராக இருக்கிறார் என்று சோலோ கிறிஸ்டோ உறுதிப்படுத்துகிறது. இது மத்தியஸ்தத்திற்காக பரிசுத்தவான்களையோ அல்லது மரியாளையோ நோக்குகிறவர்களுக்கு மாறாக நிற்கிறது. கிறிஸ்து மட்டுமே இரட்சகர், பாவிகள் பாவத்திலிருந்து மன்னிப்பைப் பெறுவதற்காகவும், அதன் மூலம் தேவனுடைய கோபத்திலிருந்து தப்புவதற்காகவும் இருக்கக்கூடிய ஒரே ஒரு இரட்சகர் அவர் தான்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சோலா ஃபிடே, அல்லது ”விசுவாசம் மட்டுமே”, என்கிற கோட்பாடு தேவன் விசுவாசிகளை விசுவாசத்தின் கருவிகளின் மூலம் மட்டுமே நீதிமான்களாக்குகிறார், மனித முயற்சி அல்லது மனித கிரியைகள் போன்ற வேறு எந்த வழிகளிலும் அவர் யாரையும் நீதிமான்களாக மாற்றுவதில்லை என்று கூறுகிறது.

சோலா கிரேசியா, ”கிருபை மட்டுமே,” என்பது தேவன் நமக்கு இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை வழங்கும் விதத்தை விவரிக்கிறது. தேவன் தாம் தெரிந்துகொண்ட ஜனங்களுக்கு நித்தியகாலமுதல் கிருபை கொடுக்கிறார். கிறிஸ்துவின் தகுதியின் அடிப்படையில் அவர் சுதந்திரமாக நம்மை நீதிமான்களாக்குகிறார், அந்த தகுதியை நம் கணக்கில் கிருபையாக வரவு வைக்கிறார்.

நமது இரட்சிப்பிற்கு பங்களிக்கும் எந்த தனிப்பட்ட தகுதியும் நம்மிடம் இல்லை என்று சோலா கிரேசியா வலியுறுத்துகிறது. நித்திய தெரிந்தெடுத்தலிலிருந்து நித்திய மகிமைப்படுத்தல் வரை இரட்சிப்பின் முழு செயல்முறையும் தேவனுடைய கிருபையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது.

*சோலி டியோ குளோரியா,* ”தேவனுக்கு மட்டுமே மகிமை” என்று பொருள்படுகிறது, சிருஷ்டிப்பிற்குள் உள்ள அனைத்து சிருஷ்டிப்புகளும் செயல்களும் இறுதியில் தேவனுக்கு மட்டுமே மகிமையைக் கொண்டுவருவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. சீர்திருத்தவாதிகள் இந்தக் கோஷத்தைப் பயன்படுத்தினார்கள். ஏனென்றால், மனிதர்களுக்கு ஒரளவு தகுதி இருக்கிறது எனக் கூறும் எல்லாக் கோட்பாடுகளையும் அவர்கள் எதிர்த்தனர். எனவே, தேவனுக்கு மட்டுமே உரிய கவனத்தை மனிதர்களுக்கு கொடுப்பதை மறுத்தனர்.

சோலாக்களைத் தவிர, சீர்திருத்த பாரம்பரியத்தின் மற்றொரு தனித்துவம் என்னவென்றால் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுகளின் ஒற்றுமை குறித்த அதன் கண்ணோட்டமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## வேதாகமத்தின் ஒற்றுமை

சமீபத்திய வரலாற்றில், வட அமெரிக்காவில் உள்ள பல சுவிசேஷ சபையார்களுக்கும், அவர்களின் செல்வாக்கின் கீழ் வருபவர்களுக்கும், பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடையில் ஒரு அடிப்படை பிரிவு இருப்பதாக நம்புவது பொதுவானதாகிவிட்டது. பழைய ஏற்பாடு பொதுவாக பிரமாணமாக பார்க்கப்படுகிறது, அதே நேரத்தில் புதிய ஏற்பாடு சுவிசேஷமாக பார்க்கப்படுகிறது. பழைய ஏற்பாடு கிரியைகளை வலியுறுத்துவதாகக் கருதப்படுகிறது, ஆனால் புதிய ஏற்பாடு கிருபையை வலியுறுத்துகிறது. பழைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏற்பாடு நியாயத்தீர்ப்பை மட்டுமே கொண்டுவருவதாக கருதப்படுகிறது, அதே நேரத்தில் புதிய ஏற்பாடு இரட்சிப்பைக் கொண்டுவருகிறது.

இதற்கு மாறாக, சீர்திருத்த பாரம்பரியம் முழு வேதாகமத்தையும் ஒரு ஒருங்கிணைந்த இறையியலை முன்வைப்பதாக பார்க்கிறது. பிரமாணமானது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் உள்ளது. சுவிசேஷம் இரண்டு ஏற்பாடுகளிலும் உள்ளது. இரண்டு ஏற்பாடுகளிலும் நல்ல கிரியைகள் தேவைப்படுகின்றன. தெய்வீக கிருபை தான் இரண்டு ஏற்பாடுகளிலும் இரட்சிப்பைக் கொண்டுவருகிறது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் நியாயத்தீர்ப்பு இருக்கிறது, புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் இரட்சிப்பு வருகிறது. நிச்சயமாக, ஏற்பாட்டுகளுக்கு இடையில் வேறுபாடுகள் உள்ளன, ஆனால் இந்த வேறுபாடுகள் வெறுமனே வளர்ச்சிகரமானவை. அதாவது, அவை முந்தைய நிலைகளிலிருந்து பிந்தைய கட்டங்களுக்கு வேத விசுவாசத்தின் முன்னேற்றங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றன. ஆனால் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுகளுக்கு இடையில் இன்னும் ஒரு அடிப்படை இறையியல் ஒற்றுமை உள்ளது.

> பெரும்பாலும் நான் கிறிஸ்தவர்களிடம் பேசும்போது, பழைய ஏற்பாட்டும் புதிய ஏற்பாடுகளும் தேவனையும் சுவிசேஷத்தையும் பற்றி பேசும் விதத்தில் முற்றிலும் வேறுபட்டவை என்பது போல் அவர்கள் செயல்படுகிறார்கள், ஆனால் வேதாகமத்தைப் படிப்பதில் நான் எவ்வளவு நேரம் செலவிடுகிறேனோ, அவ்வளவுக்கவ்வளவு அது எனக்கும் மற்றவர்களுக்கும் தெளிவாகிறது, உண்மையில் பழைய ஏற்பாட்டும் புதிய ஏற்பாடும் ஒரே குரலில் பேசுகின்றன. பழைய ஏற்பாடானது, நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனங்கள், எழுத்துக்கள் என அனைத்தும் தன்னைப் பற்றியும், சுவிசேஷத்தைப் பற்றியும், சுவிசேஷத்தின் உட்குறிப்புகளைப் பற்றியும் தெளிவாகப் பேசுகின்றன என்பதை எம்மாவுக்குச் செல்லும் வழியில் இயேசு சீஷர்களுக்குத் தெளிவுபடுத்தினார். எனவே, வேதத்தின் முழு அமைப்பும் தேவன் கிருபையில் மனிதகுலத்தை நோக்கி செயல்படுவதை அடிப்படையாகக் கொண்டது, பின்னர், அந்த கிருபையின் வெளிச்சத்தில், நம்மைப் போன்ற மக்களை அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அவருக்கு பதிலளிக்கும்படியும், இறுதியில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அழகைப் பிரதிபலிக்கும் ஒரு வாழ்க்கையில் வாழுமாறும் அழைக்கிறது. எனவே, நான் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் படிக்கையில், அவைகள் ஒரே குரலில் பேசுவதை நான் கேட்கிறேன். தேவன் கொடுக்கும் கட்டளைகள் கிறிஸ்துவுக்கு முன்னும் பின்னும்

> காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டிருந்தாலும், அவை அதே அடையாளங்களை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் அடிப்படையில் அவருடைய ஜனங்களில் அதையே எதிர்பார்க்கின்றன.
>
> – Dr. ஜே. கேரி மில்லர்

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையிலான வேறுபாடுகளை நாம் சரியாகக் கருத்தில் கொள்ளும்போது, அத்தியாயம் 7, பிரிவு 6 இல் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையில் இவ்வாறு நாம் படிக்கிறோம்:

> சாராம்சத்தில் வேறுபட்ட இரண்டு கிருபையின் உடன்படிக்கைகள் இல்லை, ஆனால் ஒன்று மட்டுமே உள்ளது, அது பல்வேறு நிர்வாகங்களின் கீழ் உள்ளது.

வேதாகமத்தின் ஒற்றுமைக்கு இந்த வலியுறுத்தல் சீர்திருத்த இறையியலில் சில பிழைகளுக்கு வழிவகுத்தது என்பது உறுதியாகும். சில நேரங்களில் பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடையில் போதுமான வேறுபாடு காட்டப்படுவதில்லை. ஆயினும்கூட, வேதாகமத்தின் ஒற்றுமையின் மீதான இந்த வலியுறுத்தல் சீர்திருத்த இறையியலின் மிகப்பெரிய பலங்களில் ஒன்றாகும். இந்த பாடங்களில், நமது இறையியலை எவ்வாறு உருவாக்குவது என்பதை ஆராயும் போது, புதிய ஏற்பாட்டை விட பழைய ஏற்பாட்டை அதிகமாக பயன்படுத்துவோம் என்பதை நீங்கள் கவனிப்பீர்கள். புதிய ஏற்பாட்டுடன் மட்டுமல்ல, முழு வேதாகமத்துடனும் ஒத்துப்போகும் இறையியலைக் கட்டமைப்பதே நமது இலக்காக இருக்கும். இந்த ஆய்வுகள் மீதான சீர்திருத்த பாரம்பரியத்தின் தாக்கம் கிட்டத்தட்ட ஒவ்வொரு திருப்பத்திலும் இந்த வழியில் தெளிவாகத் தெரியும்.

மூன்றாவது இடத்தில், சோலாக்கள் மற்றும் வேதாகமத்தின் ஒற்றுமையின் மீதான அதன் கவனத்துடன் சேர்த்து, சீர்திருத்த இறையியல் தேவனின் கோட்பாட்டைக் கையாளும் போது ஒரு தனித்துவமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

## தேவனைப் பற்றிய கோட்பாடு

> புராட்டஸ்டன்ட்கள் 500 ஆண்டுகளாக, மற்ற எல்லாக் கோட்பாடுகளும் தேவனுடைய கோட்பாட்டின் வெளிச்சத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பது முக்கியமானது என்று வலியுறுத்தியுள்ளனர். தேவனைப் பற்றிய புராட்டஸ்டன்ட் கோட்பாடு கிழக்கத்திய மரபுவழி அல்லது ரோம கத்தோலிக்கக் கோட்பாடான தேவனைப் பற்றிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கோட்பாட்டிலிருந்து கணிசமாக வேறுபட்டதல்ல. அதே நேரத்தில், இது மிகவும் தனித்துவமான புராட்டஸ்டன்ட் கோட்பாடாகும், ஏனென்றால் வேதத்தின் ஒவ்வொரு மற்ற கோட்பாட்டையும் தேவனைப் பற்றிய கோட்பாட்டின் வெளிச்சத்தில் புரிந்து கொள்ள வேண்டும் என்று புராட்டஸ்டன்ட்கள் நம்புகிறார்கள். எனவே, இறையியலாளர்கள் தேவனைப் பற்றிய கோட்பாட்டை முறையான தேவ இயல் என்று அழைக்கிறார்கள். இந்த கோட்பாடு ஒவ்வொரு விசுவாசிக்கும் இன்றியமையாதது, மேலும் ஒவ்வொரு விசுவாசியும் தங்களை இறையியலாளர்கள் என்று நினைக்கிறார்களோ இல்லையோ தேவனைப் பற்றிய ஒரு கோட்பாட்டைக் கொண்டுள்ளனர். தேவனைப் பற்றிய அந்த கோட்பாடு அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழும் விதத்திற்கு இன்றியமையாதது.
>
> – Dr. ஜே. லிகோன் டங்கன் III

வரலாற்று ரீதியாக, சீர்திருத்த இறையியல் தேவனுடைய உன்னத மற்றும் எல்லையற்ற தன்மை ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்தியுள்ளது. வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கை போன்ற சீர்திருத்த தராதரங்கள் தேவனுடைய நித்திய திவ்யமான கட்டளைகள் மற்றும் தேவனுடைய நிரந்தரமான தெய்வீகம் ஆகிய இரண்டையும் பற்றி வலுவாகப் பேசுகின்றன. சீர்திருத்த இறையியலில் உள்ள இந்த வரலாற்று சமநிலையானது, வேதம் தேவனை தெய்வீகமானவர் மற்றும் உள்ளார்ந்தவர் என்று விவரிக்கிறது என்ற உண்மையை பிரதிபலிக்கிறது. சில வேத பகுதிகளில், அவர் உயர்ந்தவராகவும், தூரமாக இருப்பவராகவும், எல்லாவற்றிற்கும் அப்பால் இருப்பவராகவும் சித்தரிக்கப்படுகிறார். பிற வேத பகுதிகளில், வேதவசனங்கள் அவரைப் பற்றி அருகில் இருப்பவராகவும், நெருக்கமானவராகவும், சரித்திரத்துடன் நெருக்கமாக சம்பந்தப்பட்டவராகவும், குறிப்பாக அவருடைய மக்களுடன் இருப்பதைக் குறித்தும் பேசுகின்றன.

ஆயினும்கூட, மற்ற கிறிஸ்தவ மரபுகளுடன் ஒப்பிடும்போது, சீர்திருத்த இறையியலின் போக்கானது, தேவனை அருகில் இருப்பவராக காட்டுவதை விட தூரமாக இருப்பவராக அதிகம் காட்டுகிறது. தேவனுடைய தயவு, இரக்கம், அவருடைய அன்பு கனிவு, அவருடைய பொறுமை, அவருடைய பிரசன்னம் போன்ற தேவனுடைய நெருக்கத்தோடு மிகவும் சுலபமாகத் தொடர்புடைய தெய்வீக பண்புகளை பிற கிறிஸ்தவ மரபுகள் அடிக்கடி வலியுறுத்துகின்றன. சீர்திருத்த இறையியலானது இந்த தெய்வீக பண்புகளை உறுதிப்படுத்துகிறது, ஆனால் அவரது நித்தியத்தன்மை, அவரது மாறாத தன்மை, அவரது சர்வாதிகாரத்துவம், அவரது சுய இருப்பு, அவரது சர்வவல்லமை மற்றும் அவரது

எங்கும் நிறைந்திருத்தல் போன்ற உன்னதத்துடன் மிகவும் நெருக்கமாக தொடர்புடைய மற்றவைகளை அது வலியுறுத்த *முனைந்துள்ளது.* எடுத்துக்காட்டாக, வெஸ்ட்மின்ஸ்டர் குறுகிய திருமறைச்சுவடியின் தேவன் பற்றிய பண்புரீதியான சீர்திருத்த வரையறையை கவனியுங்கள். தேவன் என்றால் என்ன?

> என்கிற கேள்வி எண் 4 க்கு பதிலளிக்கையில்:

இவ்வாறு திருமறைச்சுவடி பதில் தருகிறது:

> தேவன் ஆவியாயும், எல்லையற்றவாராகவும், நித்தியமானவாராகவும் மற்றும் அவரது இருப்பில் மாறாதவராகவும், ஞானம், வல்லமை, பரிசுத்தம், நீதி, நற்குணம் மற்றும் சத்தியம் உள்ளவராகவும் இருக்கிறார்.

இந்த பதில் உண்மையாகவும் வேதவாக்கியங்களுக்கு இணங்கவும் உள்ளது. ஆனால் அது தேவன் அருகிலிருக்கிறார் என்கிற குணத்தை விட அவர் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர் என்கிற குணம் சார்ந்த பண்புகளை வலியுறுத்துகிறது.

தேவன் எல்லாவற்றிக்கும் அப்பாற்பட்டவர் என்கிற ஒரு வலியுறுத்தலை உச்சநிலைக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்றாலும், தேவன் அப்பாற்பட்டவர் என்பது பற்றிய சரியான புரிதல் கிறிஸ்தவ இறையியலின் பல கூறுகளை சரியாக பலப்படுத்துகிறது. எனவே, இந்த போக்கு இந்த பாடங்களை குறிப்பிட்ட திசைகளில் வழிநடத்தும்.

சோலாக்கள், வேதாகமத்தின் ஒற்றுமை மற்றும் தேவனைப் பற்றிய கோட்பாடு ஆகியவற்றுடன், சீர்திருத்த சபையின் இறுதி தனித்துவமான ஒரு அம்சத்தையும் நாம் குறிப்பிட வேண்டும். சீர்திருத்த இறையியலானது கிறிஸ்தவத்திற்கும் மனிதப் பண்பாட்டிற்கும் இடையிலான உறவை எப்படிப் பார்க்கிறது?

## மனித கலாச்சாரம்

> சீர்திருத்த இறையியலானது தேவனுக்கும் மனித கலாச்சாரத்திற்கும் இடையே ஒரு நெருக்கமான உறவைக் காண்கிறது என்று நான் நம்புகிறேன். வேறு வார்த்தைகளில் கூறுவதானால்... தேவன் எந்த கலாச்சாரத்திலும், எந்த காலத்திலும் வெளிப்படுகிறார் என்பதை நீங்கள் எப்போதும் காணலாம். மனித வாழ்க்கையிலும், மனித கலாச்சாரத்திலும், தேவனுடைய பிரசன்னம் இன்றியமையாததாகவும் எப்போதும் தெளிவானதாகவும் உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் ஏதென்ஸில் சென்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பிரசங்கித்து, ஏதெனியர்கள் வணங்கும் ”அறியப்படாத தேவனை” கண்டு, ”நான் உங்களுக்குப் பிரசங்கிக்கும் தேவன் இவர்தான்” என்று அவர்களுக்குச் சொல்ல அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறார் என்பது ஒரு பெரிய உதாரணமாகும். அவர்கள் தேவனை நம்பவில்லை என்று சொல்லும் கலாச்சாரங்களில் கூட தேவன் பிரதிபலிக்கிறார் என்பதை நீங்கள் காணலாம், ஏனென்றால் அவர்களின் தார்மீக கொள்கைகளில் நீங்கள் சில நேரங்களில் தேவனுடைய பிரசன்னத்தையும், தேவனுடைய அன்பையும் மற்றும் தேவனுடைய சிருஷ்டிப்பையும் நீங்கள் காணலாம். அவர்கள் அதை மறுத்தாலும், தேவனுக்கும் மனித கலாச்சாரத்திற்கும் இடையே எப்போதும் ஒரு நெருக்கமான உறவு உள்ளது.
>
> – Rev. பாப்லோ டாரஸ், மொழிபெயர்ப்பு

ஜெனிவாவில் கால்வினுடைய ஊழியத்தின் காலத்திலிருந்தே, சீர்திருத்த பாரம்பரியம் இந்த விஷயங்களில் மிகவும் சீரான அணுகுமுறையை எடுத்துள்ளது. இந்த தனித்துவமான கண்ணோட்டத்தை சுருக்கமாகக் கூறுவதற்கான ஒரு வழி, ரிச்சர்ட் நைபுஹர் தனது புத்தகமான *கிறிஸ்துவும் கலாச்சாரமும்* என்ற நூலில் உருவாக்கிய நன்கு அறியப்பட்ட சொற்றொடரைப் பின்பற்றுவதாகும். தனது புத்தகத்தில், நைபுஹர் கலாச்சாரத்திற்கான பல்வேறு கிறிஸ்தவ அணுகுமுறைகளை ஐந்து முக்கிய குழுக்களாகச் சேகரிக்கிறார்.

*”கலாச்சாரத்திற்கு எதிரான கிறிஸ்து”* என்பது கலாச்சாரம் தீயது மற்றும் கிறிஸ்தவர்களால் தவிர்க்கப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்திற்கான நீபுஹரின் கருத்தாகும். இடைக்காலத் துறவி மடாலயங்கள் மற்றும் நவீன அமிஷ் மற்றும் மென்னோனைட் சமூகங்கள் போன்ற பிரிவினைவாத இயக்கங்கள் இந்தக் கண்ணோட்டத்தின் நன்கு அறியப்பட்ட வடிவங்களாகும்.

நைபுஹர் *”கலாச்சாரத்தின் கிறிஸ்து”* என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி, முதன்மையாக கலாச்சாரத்தை உறுதிப்படுத்தும் மற்றும் அவர்கள் உலகில் காணும் கிறிஸ்துவுக்கு இடமளிக்க முயற்சிக்கும் கருத்துக்களை விவரிக்க பயன்படுத்துகிறார். இந்த அணுகுமுறையை பல நவீன தாராளவாத புராட்டஸ்டன்ட் சபைகளில் காணலாம்.

கலாச்சாரத்திற்கு எதிரான கிறிஸ்து மற்றும் கலாச்சாரத்தின் கிறிஸ்து ஆகிய இரண்டு உச்சநிலைகளுக்கு இடையில், கிறிஸ்துவையும் மனித கலாச்சாரத்தையும் சமரசப்படுத்துவதற்கான பல்வேறு வழிகளை முயற்சிக்கும் மூன்று கருத்துக்களை நைபுஹர் விவரிக்கிறார். *”கலாச்சாரத்திற்கு மேலான கிறிஸ்து”* என்பது கிறிஸ்துவுக்கும் உலகத்திற்கும் இடையில் ஒரு தொகுப்பை முயற்சிக்கும் ஒரு பார்வையாகும். *”முரண்பாட்டில் கிறிஸ்துவும் கலாச்சாரமும்”*

என்பது கிறிஸ்துவுக்கும் உலகத்திற்கும் இடையில் ஒரு இரட்டைத்தன்மையைக் காணும் கருத்துக்களை விவரிக்கிறது. மேலும் ”கலாச்சாரத்தை மாற்றுகிற கிறிஸ்து” என்பது கிறிஸ்தவம் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் மற்றும் சில வழிகளில் கலாச்சாரங்களை வேதாகம சட்டங்களாக மாற்ற வேண்டும் என்கிற கருத்துடனும் தொடர்புடையது. நைபுஹரின் பார்வையில், சீர்திருத்த நிலைப்பாடானது இந்த கடைசி வகைக்குள் பொருந்துகிறது.

வெவ்வேறு காலகட்டங்களில், சீர்திருத்த பாரம்பரியமானது இந்த கண்ணோட்டத்தை பல்வேறு வழிகளில் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது. துரதிர்ஷ்டவசமாக, இந்த முயற்சிகளில் சில ஐரோப்பிய காலனித்துவத்துடன் நெருக்கமாக தொடர்புடையவை. ஆனால் கடந்த காலத்தில் மாற்றத்திற்கான மாதிரிகளில் பொதுவாக சில சாதகமான எடுத்துக்காட்டுகள் உள்ளன. பொதுவாக, நாம் ப்யூரிட்டன் இங்கிலாந்து மற்றும் ப்யூரிட்டன் அமெரிக்காவையும், ஹாலந்தில் ஆபிரகாம் குய்ப்பரின் முயற்சிகளையும், கிறிஸ்து மனித கலாச்சாரத்தை மாற்றுவதற்கான முயற்சிக்கு மிகவும் சாதகமான எடுத்துக்காட்டுகளாக சுட்டிக்காட்டுகிறோம். எல்லா நிகழ்வுகளிலும், கலாச்சாரம் குறித்த பொதுவான சீர்திருத்த நிலைப்பாட்டை பின்வரும் வழியில் சுருக்கமாகக் கூறலாம்: தேவன் முதன்முதலில் மனிதகுலத்தை உருவாக்கி, ஏதேன் தோட்டத்தில் நம்மை வைத்தபோது, அவர் மனிதகுலத்திற்கு ஒரு கலாச்சார கட்டளையை வழங்கினார். ஆதியாகமம் 1:28 இன் நமக்கு தெரிந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்” என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதியாகமம் 1:28).

ஆதாமும் ஏவாளும் உலகெங்கிலும் தேவனுடைய துணை பிரதிநிதிகளாக சேவை செய்ய அழைக்கப்பட்டனர், பூமியையும் தேவனுடைய மகிமைக்கான அதன் சாத்தியக்கூறுகளையும் நிர்வகித்து வந்தனர். சீர்திருத்த கண்ணோட்டத்தில், இந்தப் பண்பாட்டு ஆணையானது ஒதுக்கி வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, அது வேதாகமத்தின் மற்ற பகுதிகளால் உறுதிப்படுத்தப்படுகிறது. சொல்லப்போனால், கிறிஸ்து தம்முடைய சபைக்குக் கொடுத்த சுவிசேஷ கட்டளையானது, தேவனுடைய ஜனங்களை பாவத்திலிருந்து மீட்பதற்காக வடிவமைக்கப்பட்டது, இதனால் இந்த கலாச்சார கட்டளை நிறைவேறும்.

இதன் காரணமாக, வாழ்க்கையின் ஒவ்வொரு பரிமாணமும் கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்று சீர்திருத்த இறையியல் வலியுறுத்தியுள்ளது. சீர்திருத்த இறையியலானது வாழ்க்கையின் சில அம்சங்கள் மதரீதியானவை, மற்றவை மதச்சார்பற்றவை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்ற கருத்தை நிராகரிக்கிறது. இந்தக் கண்ணோட்டத்தில், வாழ்க்கை முழுவதுமே மதரீதியானது, உண்மையான அல்லது பொய் மதத்தால் ஆளப்படுகிறது. கலை, அறிவியல், சட்டம், அரசியல், வணிகம், குடும்பம், பள்ளி ஆகிய மனிதப் பண்பாட்டின் ஒவ்வொரு அம்சமும் தேவனுடைய வார்த்தையை மகிமைப்படுத்தி, தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருகிற வழிகளில் நிறைவேற்றப்பட வேண்டும்.

> வேதாகமத்தில் பல இடங்களில், தேவனுடைய ராஜ்யமானது நாம் யார், நாம் என்ன செய்கிறோம் என்பதன் ஒவ்வொரு பகுதியிலும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதும், தேவனுடைய ராஜ்யத்தைப் பிரதிபலிக்க, அவருடைய சாயலை சுமப்பவர்களாக தேவனுடைய ராஜ்யத்தைப் பிரதிபலிப்பது, நமது சீஷத்துவத்தின் இன்றியமையாத பகுதியாகும் என்பதும் மிகவும் தெளிவாகிறது. எபேசியர் 4 இல், அப்போஸ்தலனாகிய பவுல் ”கிறிஸ்துவைக் கற்றுக்கொள்வது” என்றால் என்ன என்பதைப் பற்றிப் பேசுகிறார். சீஷத்துவத்தைப் பற்றிப் பேசும்போது, அவர் ஆராதனை காரியங்களிலிருந்து தொடங்குவதில்லை. அதற்குப் பதிலாக, நாம் பொய்களைப் பேசுவதை நிறுத்திவிட்டு, நமது அயலாரிடம் உண்மையைப் பேசத் தொடங்க வேண்டும் என்று நாம் நம்முடைய அயலாரிடம் பேசுகிற விதத்திலிருந்து அவர் தொடங்குகிறார். பின்னர் ஒரு குடிமகனாக இருப்பதிலிருந்து நமது வேலை வாழ்க்கைக்கு அவர் செல்கிறார், மேலும் ”திருடியவர் திருடுவதை நிறுத்த வேண்டும், மற்றவர்களுக்கு கொடுக்க ஏதாவது வேண்டும் என்பதற்காக தனது கைகளால் வேலை செய்ய வேண்டும்” என்று கூறுகிறார். எனவே, ”கிறிஸ்துவைக் கற்றுக்கொள்வது” அல்லது கிறிஸ்துவின் சீஷராக இருப்பது, பவுலைப் பொறுத்தவரை, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் பாதிக்கிறது. பின்னர் அந்த அதிகாரத்திலும் அதிகாரங்கள் 5 மற்றும் 6 லும், அவர் குடும்ப வாழ்க்கை பற்றியும் பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள், கணவர்கள் மற்றும் மனைவிகளைப் பற்றி பேசுகிறார். நம்முடைய ஆராதனை வாழ்க்கையைப் பற்றியும், நாம் ஒருவருக்கொருவர் பாடல்களைப் பாடி, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த வேண்டும் என்பது பற்றியும் அவர் பேசுவார். மேலும் அவர் மேல் அதிகாரங்கள் மற்றும் அதிகாரிகளுக்கு நாம் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் பேசுவார். இயேசு தம்முடைய உவமைகளைச் சொன்னபோது இதையும் செய்தார். அவர் வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட பகுதியை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சுட்டிக்காட்டுவார். உதாரணமாக, இந்த ஐசுவரியவானையும் ஒரு ஏழை மனிதனையும் பாருங்கள் என்பார். தேவனுடைய ராஜ்யம் எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி அவர் பேசுவார். பணக்காரர்கள் எப்படி ஏழைகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும்? எனவே, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் தேவனுடைய ஆட்சியின் கீழ் உள்ளது.

– Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

# முடிவுரை

கிறிஸ்தவ இறையியலை ஆராய்வது பற்றிய இந்தப் பாடத்தில், இந்த முழு ஆய்வுக்கு வழிகாட்டும் சில முக்கியமான கண்ணோட்டங்களை நாம் முன்வைத்துள்ளோம். நாம் முதலில் கிறிஸ்தவ இறையியலை அப்போஸ்தலர்களின் நம்பிக்கையோடு ஒத்துப்போகிற ஒன்றாக வரையறுத்தோம். பல்வேறு சபைகளை வடிவமைத்து குணாதிசயப்படுத்தும் பல்வேறு கிறிஸ்தவ மரபுகள் இறையியலுக்குள் இருப்பதையும் நாம் கண்டோம். இறுதியாக, இந்தப் படிப்பினைகள் சீர்திருத்த மரபின் தோற்றம், வளர்ச்சிகள், போக்குகள் மற்றும் இறையியல் தனித்துவங்கள் உட்பட அதன் நோக்குநிலைகளால் வழிநடத்தப்படும் என்பதை நாம் சுட்டிக் காட்டினோம்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் கிறிஸ்தவ இறையியலை ஆராயும் பாக்கியம் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் அதை செய்யும் போது, நாம் சிந்திக்கும், நடந்துகொள்ளும் மற்றும் உணரும் வழிகளில் நம்முடைய பாரம்பரிய நம்பிக்கையிலும் நடைமுறை வாழ்க்கையிலும் சரியான உணர்ச்சிகள் மற்றும் உணர்வுகளிலும் மற்ற விசுவாசிகளுக்கும் நமக்கும் நிறைய பொதுவானவை இருப்பதைக் காண்போம். ஆனால் கிறிஸ்தவ இறையியலில் பல்வேறு வகைகள் இல்லாமல் இல்லை என்று காணலாம். ஆயிரமாண்டுகளில் வெவ்வேறு சபைகள் தங்கள் சொந்த பாரம்பரிய முன்னுரிமைகள் மற்றும் நிலைகளை உருவாக்கியுள்ளன. இந்த மரபுகளுடன் நாம் தொடர்பு கொள்ளும்போது எண்ணற்ற வழிகளில் நாம் பயனடைகிறோம். கிறிஸ்தவ இறையியலை ஆராய்வது என்பது வாழ்க்கையின் ஒவ்வொரு பரிமாணத்திலும் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் இறையியலைக் கட்டியெழுப்ப முற்படும்போது ஒவ்வொரு விசுவாசியுடனும் நாம் பகிர்ந்துகொள்ளும் ஒரு வாழ்நாள் முயற்சியாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.